விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-8943)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 06 திங்கட்கிழமை (20.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 32

## தீர்வு கிடைக்கும்வரை தொடர்ந்து போராடுவோம்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(திருகோணமலை)
தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை எமது இனத்தின் போராட்டம் தொடரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
அத் துடன் ,

➢23

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்-சலுகையை தொடர்ந்தும் வழங்கத் தீர்மானம்

### ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

(கொழும்பு)
ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை 2023ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இடையில் நடைபெற்ற சந்திப்பில் இந்த

➢23

## பொருளாதாரம் விருத்தியடைந்தால்தான்

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு



### ஜனாதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)
அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட வசதிகளை விரிவுபடுத்துவதற்கு நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடைய வேண்டும். இதற்காக அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## எம்.சி.சி.உடன்படிக்கை ஆராய குழு நியமனம்

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)
தமது அரசாங்கம் எந்தவொரு காரணத்திற்காகவும் பொதுமக்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் தெரியாமல் எந்தவொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடாது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி

➢04

## ஐ.தே.கவை உள்ளடக்கி புதிய கூட்டணி – சஜித்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக்கட்சியை உள்ளடக்கும் வகையில் புதிய கூட்டணி ஒன்றை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த தகவலை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
பியகமயில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## விக்னேஸ்வரன் வந்தால் பலமான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்ப்பு



(வவுனியா)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மாறினால் அதில் இணையத் தயார் என வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருப்பது நல்ல விடயமாகப்படுகிறது என கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
அத்துடன், அவரை உள்வாங்கும் போது பலமான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திக

➢23

## வாள்வெட்டுக்குழு மானிப்பாயில் அட்டகாசம்

(குப்பிழான்)
யாழ். மானிப்பாய் கட்டுடை அரசடிப் பிள்ளையார் ஆலய வீதியிலுள்ள வீட்டிற்குச் சென்ற வாள்வெட்டுக் குழு வீட்டின் முன்பக்க கேற்றையும், வீட்டின் பாதுகாப்பிற்காக சுற்றி அமைக்கப்பட்டிருந்த தகரத்தின் ஒரு பகுதியையும் வெட்டிச் சேதப்படுத்தி அட்டகாசத்தில் ஈடுபட்டுவிட்டுச் சென்றுள்ளது.
குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.
மேற்படி சம்பவம்

➢04

## நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)
இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் நான்கு பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்

➢23

## தொழிலை எதிர்பார்த்துள்ள அனைத்து பட்டதாரிகளும் உடனடியாக அரச தொழில்களுக்கு நியமிக்கப்படுவர்

### பட்டதாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய உறுதி

(கொழும்பு)
தொழிலை எதிர்பார்த்துள்ள அனைத்து பட்டதாரிகளையும் தேசிய பொருளாதாரத்தில் நேரடி பங்காளர்களாக்கும் வகையில் உடனடியாக அரச தொழில்களுக்கு நியமிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.
நாடளாவிய ரீதியில் தொழிலை எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த பட்டதாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி.கோட்டாபய ராஜ பக்ஷ இதனை தெரிவித் தார்.
அரச, பகுதியளவு அரச மற்றும் திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

➢23

## துப்பாக்கிச் சூட்டில் பிக்கு உயிரிழப்பு

### ஹுங்கம பிரதேசத்தில் சம்பவம்

(கொழும்பு)
ஹுங்கம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளை நோக்கி பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பௌத்த மதகுரு ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த பகுதியில் நேற்று முன்தினம் வீதித் தடுப்பில்

➢23

## வெளிநாட்டு சக்திகளினூடாகவே தமிழர்களுக்கான தீர்வைப் பெறலாம்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நம்பிக்கை

(வவுனியா)
வெளிநாடுகளை அழைப்பதன் மூலமே தமிழர்கள் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் கூறுகையில், "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இல்லை என ஜனாதிபதி கோட்டா

➢23

## விபத்தில் சிக்கிய முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
விபத்தில் சிக்கிய முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

➢23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 7 விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் - ஜனாதிபதி



(கொழும்பு)

ஏழு முக்கிய விடயங்களுக்கு மாகாண சபைகள் முன்னுரிமை வழங்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ சுற்று நிரூபனம் ஒன்றின் ஊடாக பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்த விரிவான பணிப்புரைகள் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர விற்கு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய பாடசாலைகள், வைத்திய சாலைகள், வாராந்தர சந்தை, பொது பேருந்து நிலையங்கள், வீதி சுத்திகரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கழிவு பொருள் முகாமைத்துவம் என்பன சிறந்த முறையில் தொழிற்படுவது குறித்து முன்னுரிமை முறையில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த விடயங்களுக்கு ஜனவரி முதல் மார்ச் மாத காலப்பகுதியினுள் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த ஏழு விடயங்களின் மேம்பாடு குறித்த நடவடிக்கைகள் உடன் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விடயங்களும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியின் பணிப்புரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஞா)

# கதிர்காமத்தில் கோர விபத்து 5 பேர் பலி

(கொழும்பு)

கதிர்காமத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் பலர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - கதிர்காமம் வீதியில் ஹ°ங்கம பகுதியில் நேறறிரவு டிப்பர் ஒன்றும் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டமையினால் விபத்து ஏற்பட்டுள்ளது. ஐந்து பேர் பலியானதுடன் மேலும் பலர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயம் அடைந்தவர்களில் பலர் ஆபத்தான நிலையில் உள்ளமையினால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ஞா)

---

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம் : 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி
இடம் : கரவெட்டி பிரதேச செயலகம் கேட்போர்கூடம்

தலைவர்
**திரு.வ.கணேசமூர்த்தி**
(தலைவர் - கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி)

விருந்தினர்
**Dr.S.ரிஸாந்தன்**
(கால்நடை வைத்திய அதிகாரி, கரவெட்டி)
**Dr.R.பிருகஸ்வினி**
(கால்நடை வைத்திய அதிகாரி, கரவெட்டி)
**திருமதி இந்திரவதனா செல்வரதன்**
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

நிகழ்வுகள்
- மங்கள விளக்கேற்றல்
- மௌன இறைவணக்கம்
- தலைமையுரை
- சென்ற பொதுக்கூட்ட அறிக்கை
- கணக்காய்வு அறிக்கை 2017
- உத்தேச வரவு செலவுத்திட்டம் 2020
- இயக்குநர் சபை பிரேரணை
  - புதிய மில்ரொபி செய்யும் இயந்திரம் கொள்வனவு செய்தல்
- செலவின அங்கீகாரம்
  - முச்சக்கரவண்டி திருத்தம்
  - உற்பத்தி பகுதிக்கு வர்ணம் பூசுதல்
  - குளிர்சாதனப் பெட்டி கொள்வனவு
  - கணனி உதிரிப்பாக கொள்வனவு
  - யூஸ் பொதி செய்யும் இயந்திர திருத்தம்
- விருந்தினர் உரை
- நன்றி உரை

*அங்கத்தவர்கள் அனைவரும் கூட்டத்துக்கு தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்*

தலைவர்,
(C-9003) கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி பிரதேசம்

---

## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர் பூக்கள்



அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி
**இ.ஜெயராஜ்** அவர்களின் பாசமிகு தாயார்
அமரர் **குலமணி இலங்கராஜா**

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்துள்ள நாம் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா எல்லாம்வல்ல ஈழத்துச்சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் கிளை, யாழ் கிளை.
நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள்.
(C-9006)

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ...

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 20.12.2019 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர் **பொன்னுத்துரை காண்டீபன்** (காண்டி)
(கிரிஷன் வெள்ளிரும்பு தொழிலக உரிமையாளர்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (21.01.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)**

மில் ஒழுங்கை,
மல்லாகம்.
077 134 5985

இங்ஙனம் :
குடும்பத்தினர்
(1929)

---

## மரண அறிவித்தல்

மண்மகிழ்
02
01
1938



கண்நெகிழ
18
01
2020

### கணேசஐயா தனபாக்கியம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கணேசஐயா தனபாக்கியம் அவர்கள் 18.01.2020 சனிக்கிழமை அதிகாலை 4.25 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - சரஸ்வதி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி, காலஞ்சென்ற கணேசஐயா ஆகியோரின் மனைவியும் காலஞ்சென்றபரமேஸ்வரி, காலஞ்சென்ற தர்மபூபதி மற்றும் அருணநாயகி, இராதரநாயகி, காலஞ்சென்ற தர்மஞானசிங்கம், காலஞ்சென்ற வரதன், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் சதானந்தசிவம், நந்தகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற துரவாகரன் (மதி) மற்றும் ஸ்ரீரஞ்சனா, கமலேஸ்வரி (கமலா), கமலேஸ்வரன் (கண்ணன்), சசிகலா (சசி), தயாபரன் (பிரான்ஸ்), கனகலிங்கம், காலஞ்சென்ற கனகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செந்தினி, காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் கமலதாஸ் (அசோக்), சர்வகுமாரி, புஸ்பராஜ் (கண்ணன்) (மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப்பாடசாலை பணியாளர்), சிவாஜினி(கவி), பவளம், தருணாகரஐயர், காலஞ்சென்ற திருட்செல்வம், மற்றும் கிருஸ்ணகுமாரி (வசந்தி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2020) செவ்வாய்க்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் உடுவில் புளியடி வைரவர் கோவிலடியில் உள்ள மகன் கண்ணனின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-9005)

புளியடி வைரவர் வீதி, உடுவில். 077 949 4602 தகவல் : குடும்பத்தினர்

# ஈழத்தமிழர்களை ஒடுக்குவதற்கு இலங்கைக்கு இந்தியா உதவுகிறதா?

## டாக்டர் ராமதாஸ் சந்தேகம்

(கொழும்பு)

**இலங்கை இராணுவம் பாதுகாப்புக் கருவிகளை வாங்குவதற்கு இந்திய அரசு உதவ முன்வந்துள்ளதன் ஊடாக ஈழத்தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு உதவு கிறதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதென பா.ம.க. நிறுவநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.**



இவ்விடயம் தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் "இலங்கை இராணுவத்துக்கு பாதுகாப்பு கருவிகளை வாங்க 50 மில்லியன் டொலர் நிதி வழங்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

இது ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயலாகும். இந்த நிதியை ஈழத்தமிழர்களை ஒடுக்குவதற்காக இலங்கை அரசு பயன்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது.

ஈழத்தமிழர் நலன், தமிழக மீனவர்கள் பாதுகாப்பு குறித்து இந்தியாவுக்கு அளித்த உறுதியை இலங்கை அரசு காப்பாற்றவில்லை. ஒன்றரை இலட்சம் ஈழத்தமிழர் படுகொலை குறித்த போர்க்குற்ற விசாரணைக்கும் இலங்கை ஒத்துழைக்கவில்லை. இத்தகைய சூழலில் இலங்கைக்கு பாதுகாப்புக் கருவிகள் வாங்க இந்தியாஉதவவேண்டியதேவைஎன்ன?

ஈழத்தமிழர்கள் படுகொலை விவகாரத்தில் இலங்கை அரசு குற்றவாளி. அத்தகைய நாட்டுக்கு இந்தியா 50 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவது போர்க் குற்றத்திற்கான வெகுமதியாகவே அமையும். எனவே, இலங்கைக்கு இந்தியா எந்த உதவியும் வழங்கக் கூடாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மானிப்பாயில் வாள்வெட்டு

### ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இரு குழுக்களுக்கிடையில் நிலவிவந்த பகை காரணமாக குறித்த வாள்வெட்டு இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மானிப்பாயில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## காணாமல் போன சிறுவர்கள் மூவரும் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பகுதியில் காணாமல் போன மூன்று சிறுவர்களும் நேற்று அதிகாலை பொதுமக்க ளால் கண்டுபிடிக்கப்பட்ட னர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாகர் கோவில் பகுதியைச் சேர்ந்த மூவரே நேற்று முன்தினம் காணாமல் போயிருந்தனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸாரும் பொதுமக்களும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த பகுதியிலுள்ள பிள்ளையார் கோவில் மடத்தில் மூவரையும் பொதுமக்கள் நேற்று அதிகாலை கண்டுபிடித்தனர்.

இவர்களில் இருவர் 12 வயதிற்கு குறைவானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10-60)

## கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு மத்திய குழுக்கூட்டத்தில் தீர்மானம்

### ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூலம் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகி கட்சிக்கு எதிராக செயற்பட்டோருக்கு எதிராக அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் எனத் தெரிவித்த பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, ஒழுக்காற்று குழுவின் அறிக்கைக்கு ஏற்ப இவ்வாறானவர்களை கட்சியிலிருந்து நீக்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூடிய ஒழுக்காற்று குழுக் கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் தொடர்பில் ஏதேனும் தீர்மானங்களை எடுத்துள்ளதா என்பது தொடர்பில் வினவிய போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுஜன பெரமுனவில் இணைந்து செயற்படுகின்ற இராஜாங்க அமைச்சர்களான எஸ்.பி.திஸாநாயக்க, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோருக்கு சனிக்கிழமை சு.கவின் ஒழுக்காற்று குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

எனினும் குறித்த நால்வரும் ஒழுக்காற்று குழுவில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர்களது சட்டத்தரணிகள் ஊடாக தமது பக்க நியாயங்களை தெளிவுபடுத்வதற்கான ஆவணங்களை ஒழுக்காற்று குழுவில் சமர்ப்பித்திருந்தனர்.

ஒழுக்காற்று குழு முற்றிலும் சுயாதீனமானது. அதன் நடவடிக்கைகளில் எம்மால் தலையிட முடியாது. எனினும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களைக்கொண்டு ஒழுக்காற்று குழுவால் அறிக்கையொன்று தயாரிக்கப்படும். அந்த அறிக்கை கட்சியின் மத்திய குழுவில் சமர்பிக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் அறிக்கை மற்றும் ஒழுக்காற்றுக் குழு உறுப்பினர்களின் ஆலோசனைக்கு அமையவே கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படுபவர்களை கட்சியிலிருந்து நீக்குவதா அல்லது வேறு தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் ஆராயப்படும். எனவே அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் இவர்கள் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (ஐ)






# தொடரைக் கைப்பற்றியது இந்தியா



இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

அந்தவகையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்திய அணி 2:1 என்ற கணக்கில் வென்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான தீரமானம் மிக்க, 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டி பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இந்நிலையில் முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் 3 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார். இதனையடுத்து அணித்தலைவர் ஆரோஞ் பிஞ்ச் 19 ஓட்டங்களைப் பெற்றவேளை ரன்அவுட் மூலம் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

இதையடுத்து களமிறங்கிய ஸ்டீவன் சுமித் மற்றும் மார்னஸ் லபுஸ்சங்னே ஆகியோரின் இணைப்பாட்டம் அணியை வலுவான நிலைக்கு இட்டுச்சென்றது. இதன்படி அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அணிசார்பாக, ஸ்டீவன் சுமித் ஒரு சிக்ஸ், 14 பௌன்ட்ரி உள்ளடங்கலாக 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன், மார்னஸ் லபுஸ்சங்னே 54 ஓட்டங்களையும், அலெக்ஸ் ஹரே 35 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.



பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக, மொஹமட் ஷமி 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன் ஜடேஜா 2 விக்கெட்டுகளையும் நவ்தீப் ஷைனி மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் பதிலுக்கு 287 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ரோஹித் ஷர்மாவின் சதத்தின் உதவியுடன் இந்திய அணி, 47.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன்படி இந்திய அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

அணிசார்பாக, ரோஹித் சர்மா 6 சிக்ஸ், 8 பௌன்ட்ரிகள் அடங்கலாக 119 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன் அணித்தலைவர் விராட் ஹோக்லி 89 ஓட்டங்களையும் லோகேஷ் ராகுல் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இதேவேளை, ஸ்ரேயஸ் ஐயர் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும், மனிஸ் பான்டே ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களையும் பெற்று களத்தில் நின்றனர்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில், ஜோஸ் ஹஸல்வூட், அஷ்ரன் அகர் மற்றும் அடம் ஷம்பா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 2 வெற்றிகளைப் பெற்று மூன்று போட்டிகள் கொண்ட தொடரைக் கைப்பற்றியுள்ளது.

## மரண அறிவித்தல்



### மரியாம்பிள்ளை மேரி திரேசா
### (ஞானமணி)

யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு மணற்குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை மேரி திரேசா (ஞானமணி) அவர்கள் நேற்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அவுராம்பிள்ளை - திரவியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - சூசானம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முன்னாள் முல்லைத்தீவு பட்டின சபைத் தலைவர் சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி தலைவர் அன்ரனி ஜெயநாதன், மேரி ஆன்பிரான்சிஸ்க்கா (லீலா,கொழும்பு), அலோசியஸ் நேசராசா (குலசிங்கம்), காலஞ்சென்ற மேரி ப்ரிம்ரோஸ் (புசி), அன்ரனிப்பிள்ளை, மேரி கொன்ஸ்செப்ரா (பேபி- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.01.2020) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் இல்லத்திலிருந்து எடுத்து செல்லப்பட்டு புனித பேதுரு வானவர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு உண்ணாபிலவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொகின்றோம்.

மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(C-9009)

தகவல்:-
குடும்பத்தினர்.

## நிதானமாகத் துடுப்பெடுத்தாடும் சிம்பாவே

இலங்கைக்கும் ஸிம்பாவேக்கும் இடையில் ஹராரேயில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த ஸிம்பாவே முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது.

நான்கு நாள் டெஸ்ட் போட்டியை கட்டாயமாக்கப்போவதற்கான யோசனையை ஐ.சி.சி. முன்வைத்துள்ள நிலையில் டெஸ்ட் போட்டிக்கு 5 நாட்கள்தான் பொருத்தம் என்பதை நிரூபிக்குமாப்போல் மிகவும் நிதானமாக ஸிம்பாப்வே துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களில் ஒருவரான ப்ரின்ஸ் மசுவோர் 3 மணித்தியாலங்களும் 35 நிமிடங்களும் துடுப்பெடுத்தாடி 149 பந்துகளை எதிர்கொண்டு 55 ஓட்டங்களைப் பெற்றார்.

மற்றைய ஆரம்ப வீரரான கெவின் கசுஸா 5 மணித்திய ாலங்களும் 20 நிமிடங்களும் துடுப்பெடுத்தாடி 214 பந்துகளை எதிர்கொண்டு 63 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆரம்ப விக்கெட்டில் மசுவொரும் கசுஸாவும் 96 ஓட்டங்களைப் பகிர்ந்ததுடன் இரண்டாவது விக்கெட்டில் கசுஸாவும் ஏர்வினும் 68 ஓட்டங்களையும் பகிர்ந்தனர்.

மூன்றாம் இலக்க வீரரும் அனுபவசாலியுமான க்ரெய்க் ஏர்வின் சற்று வேகமாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். மற்றொரு அனுபவசாலியான ப்றெண்டன் டெய்லர் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இலங்கை பந்துவீச்சில் லசித் எம்புல்தெனிய 37 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் லஹிரு குமார 69 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## எம்.சி.சி....

யின் அரசாங்கத்திற்குமான வேறுபாடு இதுவேயாகும் என பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சரவையால் கடந்த ஒக்டோபர் மாதம் அனுமதி வழங்கப்பட்டுள்ள எம்.சி.சி. உடன்படிக்கையில் அடங்கியுள்ள விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியால் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த குழுவின் அறிக்கையை ஆராய்ந்து அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்னவென்று அமைச்சரவை எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கும் என பிரதமர் தெரிவித்துள்ளார். (ஞா)

## வாள் வெட்டுக்....

தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,நேற்று பிற்பகல் வாள்களுடன் வந்த ஐந்துபேர் கொண்ட வாள்வெட்டுக் குழு வீட்டின் முன்பக்க கேற்றையும் வீட்டைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த தகரத்தின் ஒருபகுதியையும் வாள்களால் வெட்டிச் சேதப்படுத்தும் சத்தம் கேட்டு வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிட்டுள்ளனர். இதனையடுத்துக் குறித்த குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.சம்பவம் தொடர்பில் உடனடியாக மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ஞா-18)

# சுயாதீன ஆணைக்குழுக்களை ஒழிக்கவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை கோரல்

## அரச தரப்பு மீது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

(பொரளை)

**சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்து பாராளுமன்றத்தை தன்னகத்தே வைத்துக்கொள்ளும் நோக்கில் தான் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



பொரளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய சந்தர்ப்பம் எமக்கு ஏற்பட்டுள்ளது. நாம் நிச்சயமாக இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து பலமானதொரு கூட்டணியை நாம் ஸ்தாபிப்போம்.

இந்தக் கூட்டணியில் களமிறங்கி, மீண்டும் தேர்தலில் வெற்றியடைவோம். இதற்காக நாம் தயாராகிவிட்டோம்.


புதிய நபர்களுடன் பயணத்தைத் தொடர வேண்டும் என்பது தான் எமது நோக்கமாகும். நாம் பதவிகளுக்காக என்றும் கவலையடைந்ததில்லை. பதவிகளைக் கொண்டு எம்மைப் பிரிக்கவும் முடியாது.

நாம் என்றும் மக்கள் மத்தியில்தான் இருக்கின்றோம். எமது எதிர்த்தரப்பிலுள்ள அமைச்சரொருவர் கூறுகிறார், தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவர்களுக்குத் தேவை என்று. நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர்களுக்கு வழங்கத் தயாராகவே இருக்கின்றோம். அடுத்த வாரம் என்றாலும் நாம் தயார்.

ஏப்ரல், மே வரை காத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஆனால், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

அதைவிடுத்து, மக்களை முட்டாளாக்கும் வகையில், சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்யவே அரசாங்கம் முற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்குத்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இவர்கள் கோருகிறார்கள். இதுதான் இவர்களின் உள் நோக்கமாகவும் காணப்படுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சர்வதேச கண்காட்சியில் இலங்கையின் சுப்பர் கார்



(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறவுள்ள சர்வதேச மோட்டார் கண்காட்சியில் இலங்கையர் உருவாக்கிய சுப்பர் கார் பங்குபற்றவுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை சுவிஸின் ஜெனிவா நகரில் சர்வதேச மோட்டார் ஷோ கண்காட்சி இடம்பெறவுள்ளது. இதில் உலகின் பல நாடுகளிலிருந்தும் சுப்பர் கார்கள் பங்குபற்றவுள்ளன.

இதில் இலங்கை மென்பொருள் உருவாக்குநரான ஹர்ஷ சுபசிங்க உருவாக்கிய "வேகா" சுப்பர் கார் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# மரண அறிவித்தல்

## அருளம்பலம் சாந்தமலர் (பதுமன்)



கணுக்கேணியைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சாந்தமலர் (பதுமன்) 16.01.2020 வியாழக்கிழமை அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் அருளம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை பத்தர் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் யமுனா, இதயம், ரதி, ரவி, அமுதா (கனடா), ராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலம்சென்ற குஞ்சன், ராசன்; காலஞ்சென்ற மோகன், நிஜிதா, ஜெயராஜ் (கனடா), பாலசந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசலட்சுமி, காலஞ்சென்ற குணலட்சுமி, தவமணி, காலஞ்சென்ற ரத்தினகோபால், தறுமுபத்தர், தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் யாழினி(சுவிஸ்), சாதனா(லண்டன்), அருட்சா, காலஞ்சென்ற சுபித்திரா, சானுஷா, சானுதா, லெனோஸ், லெனோஷா, செயந்தன், விஜிதா, ரெவ்னி, ஸ்ரீவித்தியா, விஜிதரன், அனோஜன், தனோஜன், சலக்ஷன், காலஞ்சென்ற நிறோஜினி, நிறோஜன், சதுர்சன், சாருஜன், சம்சிகன், தர்சிகா (கனடா), சேனுஜா, விதுர்சிஜா, (வித்தியானந்தா கல்லூரி), தர்விந் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.01.2020 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக தண்ணீரூற்று கற்பூரப்புல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

3 ம் வட்டாரம்,
முள்ளியவளை

தகவல்:
குடும்பத்தினர்

C-9002

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்...

## பாசமலர்களின் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திதி: 20.01.2020

ஒன்பது ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
இவ்வுலக வாழ்வில் எம்மை நல்வழி
நடத்தி நல்வாழ்வு
வாழ வழி சமைத்த
அன்புத் தெய்வங்களே!
நீங்கள் எம்மை விட்டுப்
பிரியாமல் எம்முடன் வாழ்கின்றீர்கள்
என்ற நம்பிக்கையுடன்
நாம் இன்னும் உயிர் வாழ்கின்றோம்.



"கலாபூஷணம்"
செல்லையா
மெற்றாஸ்மயில்




திருமதி உதயராணி
கோபாலகிருஷ்ணன்

பாசமிகு அன்புச் சகோதரர்களின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

18, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்
தொ.இல: 021 222 3586

1909





யாழ்ப்பாணம் - நல்லூர் கைலாசப்பிள்ளை யார் கோவில் இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த இளைஞர் பொங்கல் விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

(படம்:- சிவசாந்தன்)



உயிரிழந்த நண்பர்களின் நினைவாக சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழகத்தினரும், சிவன் தொண்டர்களும் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் அண்மையில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: குப்பிழான் செய்தியாளர்)

## பார்த்தீனியம் அழிப்பு நடவடிக்கை

(கொடிகாமம்)

தென்மராட்சி பிரதேச சமூக சித்த மருத்துவர்கள் டாக்டர் திருமதி க.றஜிதா, டாக்டர் தனுராஜ் ஆகியோரால் பார்த்தீனியம் அழிப்பு நடவடிக்கை கொடிகாமம் நாவலடி அரசினர் வித்தியாலயத்திற்கு முன்பாக அண்மையில் நடைபெற்றது. (ஜ-114)



# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## இறைவனிடம் வேண்டுதல் செய்யும் முறை

ஆலயங்களிலோ அல்லது வீடுகளிலோ பூஜை செய்யும் முறையை கவனித்துப் பாருங்கள். அதில் ஒரு ரகசியம் மறைந்திருப்பதை அறியலாம். அது என்ன வென்று பார்ப்போம்.

பஞ்சபூதகூட்டு எங்கே நிகழ்கிறதோ அங்கே ஒரு உருவாக்கம் நிகழும் என்பதை நம் முன்னோர்கள் அறிந்திருந்தார்கள். அதன் அடிப்படையிலேயே வேண்டுதல் செய்யும் முறையாக, பூஜைகள் செய்யும் வழிமுறைகளை உருவாக்கினார்கள்.

நோக்கம் எதுவும் இல்லாமல் எந்த ஒரு பூஜையும் செய்யப்படுவதில்லை. இதன் அடிப்படையிலேயே சங்கல்பம் இல்லாத பூஜைக்கு பலன் இல்லை எனக் கூறுவார்கள். பஞ்சபூதங்களை ஓரிடத்தில் சேர்த்து வைத்து அந்த இடத்தில் என்ன சங்கல்பம் செய்தாலும் அது நடைமுறையில் நிறைவேறி வருவதை அனுபவபூர்வமாக உணரலாம். பஞ்சபூதங்களை எப்படி சேர்ப்பது எனப்பார்ப்போம்.

பூஜைகள் செய்யும் போது முதலில் மண்ணினாலோ அல்லது சாணத்தினாலோ அல்லது மஞ்சள் பொடியினாலோ ஒரு பிள்ளையார் பிடித்து வைப்பார்கள். இந்த பிடித்து வைத்த பிள்ளையார் மண் தத்து வத்தைக் குறிப்பார்.

அடுத்து அதன் அருகே ஒரு மண் கலசத்திலோ அல்லது பித்தளை செம்பிலோ நீர் நிரப்பி வைப்பார்கள். நீர் தத்துவத்தை சேர்ப்பதற்காக இப்படி செய்கிறார்கள். அடுத்து அதன் அருகே தீபம் ஏற்றி வைப்பார்கள். நெருப்பு தத்து வத்தை சேர்ப்பதற்காக தீபம் ஏற்றப்படுகிறது. அடுத்து சாம்பிராணி புகையை போடுவார்கள். அகர்பத்தி ஏற்றி வைப்பார்கள். இந்த புகை காற்றில் மனம் பரப்பும் தன்மையுடையது.

காற்று தத்துவத்தை சேர்ப் பதற்காக சாம்பிராணி புகை போடப்படுகிறது. அகர்பத்தி ஏற்றி வைக்கப்படுகிறது. ஆகாய தத்துவம் எங்கும் நிறைந்திருக்கிறது. (மீன் எப்பொழுதும் நீருக்குள்ளேயே இருப்பதால் நீரை அது உணர்வதில்லை. அது போல் நாம் எப்பொழுதும் ஆகாயத்திற்குள் ளேயே இருப்பதால் நாம் ஆகாயத்தை உணர்வதில்லை) இதையடுத்து கற்பூர ஆரத்தி காட்டப்படுகிறது. கற்பூர ஆரத்தி காட்டும் போது கூடவே மணியும் அடிக்கப்படுகிறது.

கற்பூர தீபம் விந்து (ஒளி) தத்துவத்தையும் மணி ஓசை நாத(ஒலி) தத்துவத்தையும் குறிப்பவையாகும். பூஜை செய்யும் போது என்ன நிகழ்கிறது என்றால் ஸ்தூல தத்துவங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களும், சூட்சும தத்துவங்களான விந்துவும், நாதமும் ஓரிடத்தில் இணைகின்றன. அந்த . இடத்தில் நாம் என்ன சங்கல்பம் செய்கிறோமோ அந்த சங்கல்பம் எளிதில் நிறைவேறுகிறது. இறை வழிபாட்டில் முக்கிய பங்கு வகிப்பவை கடவுளின் உருவம் அதற்கு தகுந்த வடிவத்தில் அமைக்கப்படுகிறது. அந்த வடிவம் வேண்டியதை தரும் என்ற நம்பிக்கை மூளையில் பதிய வைக்கப்படுகிறது. கட வுள் சிலைகள் எல்லாமே ஒரு வகையான அடையாளக் குறியீடுகளே.

அளவற்ற ஆற்றல் உடையது மனித மூளை என்றாலும், அவரவர் தேவைக்கு தகுந்தாற்போல்தான் நாம் அதை பயன் படுத்தி வருகின்றோம். மனிதர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொரு ட்டே உருவ வழிபாட்டு முறையில் பன்மை தன்மை கடைப்பிடிக்கப்படுகிறது. கடவுள் தன்மை ஒருமைதான் என்றாலும் அவரவர் பார்க்கும் விதத்தில் அது பன்மையாக தோற்றமளிக்கிறது.

கடவுள் படங்களையோ அல்லது உருவங்களையோ பார்த்து மனதில் பிரார்த்தனை செய்யும் பொழுது அந்த கடவுள் உருவத்திற்கு முன்னே மேற் கூறியவாறு பஞ்ச-பூத சேர்க்கையை ஏற்படுத்திக் கொண்டு பிரார்த்தனை செய்தால் நம் வேண்டுதல்கள் நிறை வேறும்.

## இராசி பலன்

**மீனம்:** அரை குறையாக இருந்த பணிகளை இன்றும் செய்து முடிப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், போசன சுகமுண்டு.

**மேடம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், அதிகாரிகளை அனு சரித்துச் செல்வது நல்லது, முயற்சியில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**இடபம்:** ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மிதுனம்:** வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

கிரகநிலை: ராகு; சுக்; சூரி, புத; சனி, கேது.குரு; செவ் ,சந்

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி

**20.01.2020**

தை 06, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 4.19 மணிவரை
அனுசம் பின்னிரவு 1.49 மணிவரை
சுபநேரம் 12.35-2.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை
ஸ்மார்த்த ஏகாதசி விரதம்
பணிவில்லாத அழகு பாராட்டுப் பெறாது
**வளவன்**

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பணத்தேவை எளிதில் பூர்த்தியாகும், மனதிற்கினிய சம்பவம் நடைபெறும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், தாய்வழி அனுகூலமுண்டு.

**தனுசு:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வழிபாடு குதூகலம் தரும்.

**துலாம்:** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம், எதிர்பாராத தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.


# ஜனாதிபதியுடன் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய அரசாங்கம் வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தெரிவித்தார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல் தொடர்பாக இதன்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதுடன், இரு நாட்டு இராணுவத்தினருக்குமிடையே பலமான ஒத்துழைப்புகள், சமுத்திர பாதுகாப்பு, கரையோர பாதுகாப்பு படைகளுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கிடையிலான சமுத்திர வலயம் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய இந்திய பாதுகாப்பு ஆலோசகர், ஏனைய பிராந்திய நாடுகளையும் கண்காணிப்பாளர்களாக இந்தச் செயற்பாட்டில் இணைத்துக்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இரகசிய தகவல்களை ஒன்றுதிரட்டும் தொழில்நுட்பத்திற்கு இலங்கைக்கு உதவியளிக்க இந்தியா உறுதியளித்துள்ளது.

அத்துடன் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# கொழும்பில் போட்டியிடுமாறு மகிந்த அமரவீரவிடம் கோரிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுமாறு அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவர் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த யோசனையை முன்வைத்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் வலுவான தலைமைத்துவம் இல்லை என்பதால் தான் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த யோசனைக்கு மகிந்த அமரவீர இதுவரை பதிலளிக்கவில்லை.

அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் என்பதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

மணிவிழாக்காணும் நாயகி



திருமதி
அன்னலட்சுமி பரமலிங்கம்
(SP.Tr-Sivam, SLTS-1)

30 வருட ஆசிரியர் சேவையை சிறப்புற முடித்து 20.01.2020 ஆம் திகதி எமது பாடசாலையில் இருந்து ஓய்வு பெறும் ஆசிரியரை எல்லாம் வல்ல இறைவன் ஆசி பெற்று ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
மு/வேணாவில் சிறி முருகானந்தா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு

(C-8925)

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்

திரு.வேலாயுதம் சிவராஜா



(உதவி மாவட்ட செயலர் மாவட்ட செயலகம், மன்னார்.)

திரு.சூசையப்பு ஜோசப் வோல்டி சொய்சா



(இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்.)

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவைகள் அலுவலராக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சேவையாற்றி இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட திரு.**வேலாயுதம் சிவராஜா** அவர்களையும், மன்னார் மாவட்டத்தில் சமூக சேவைகள் அலுவலராகச் சேவையாற்றி இலங்கைத் திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட திரு.**சூசையப்பு ஜோசப் வோல்டி சொய்சா** அவர்களையும் பேருவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். எமது சங்கத்தின் உறுப்பினர்களாகிய இவர்கள் அரச சேவையில் மேன்மேலும் உயர்வுகளை அடைய உளமார வாழ்த்துகின்றோம்.

(C-8945)

வட மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்.

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA, M.phil, Phd, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில், மணமகன் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/7005 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 52 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/7087 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 33<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HND, Canada<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7010 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 54 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தரதொழில் புரிபவர்<br>தொ.இ: G/7091 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>தகைமை/தொழில்:A/L,கட்டட ஒப்பந்தகாரர்<br>தொ.இ: B/7014 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்1<br>கி.பா: 54 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7092 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4செவ் 2 இல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: A/L, Canada<br>தொ.இ: B/7018 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம் செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/7102 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# லிபியா போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்த ஜேர்மனி பேச்சுவார்த்தை ஒரு முக்கிய படியாகும் -எர்டோகன்

(டிரிபோலி)

லிபிய போர்நிறுத்தத்தை உறுதிப்படுத்த, ஜேர்மனியில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை ஒரு "முக்கியமான படியாக" இருக்கும் என துருக்கிய ஜனாதிபதி தயிப் எர்டோகன் தெரிவித்தார்.



இது குறித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இஸ்தான்புல் விமான நிலையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், "பேர்லின் உச்சிமாநாட்டை ஒரு முக்கியமான படியாகவும், அரசியல் தீர்வாகவும் நாங்கள் பார்க்கிறோம்" எனக் கூறினார்.

ஆனால் ஜனவரி 12 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு பின்னர் சமாதானத்திற்கான முயற்சிகளில் உள்ள முன்னேற்றத்தை குழப்பவாதிகளின் இலட்சியங்களுக்கு தியாகம் செய்யக்கூடாது" என்றும் தெரிவித்தார். (ஐ)

# மருதங்கேணி-தாளையடியில் 18கிலோ கஞ்சா மீட்பு

(சாவகச்சேரி)

மருதங்கேணி-தாளையடிப் பகுதியில் 18 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் ஒருவர் மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுவரி உதவி ஆணையாளர் பிரபாத் ஜெயவிக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலில், யாழ். மாவட்ட மதுவரிப் பொறுப்பதிகாரி கூ. ரகுநாதனின் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி மதுவரிப் பொறுப்பதிகாரி இந்திக்க பிரியசாந்த தலைமையிலான மதுவரித் திணைக்களத்தினர் இக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் மீட்கப்பட்ட கஞ்சா ஆகியவற்றை இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மதுவரித் திணைக்களத்தினர் முன்னெடுத்துள்ளனர். (9-30-60)

# பொங்கல் நிகழ்வுகள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் தைப்பொங்கல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் கனகேஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (9)



(சிவநகர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் சிவநகர் கிராம மூத்தோர் சங்கத்தினரால் நேற்று தமிழர் பண்பாட்டுப் பெருவிழாவான தைப்பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர், கனடா உதவும் கரங்கள் அமைப்பின் உறுப்பினர்கள், மூத்தோர்கள் பலர் கலந்து கொண்டனர். (9-254)

# வவு.பம்பைமடுவில் அம்மாச்சி உணவகம்

(நெளுக்குளம்)

விவசாய திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் ஒரு அம்மாச்சி உணவகமே வவுனியாவில் இருப்பதாகவும் விரைவில் பம்பை மடுவில் ஒரு அம்மாச்சி உணவகம் அமைக்கப்படவுள்ளதாக வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் சகிலாபாணு தெரிவித்தார்.

வவுனியாவில் அண்மையில் மூடப்பட்ட இரு அம்மாச்சி உணவகங்கள் தொடர்பாக அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய திணைக்களமானது அமுதம் பெண்கள் விவசாய அமைப்பு என்ற அமைப்பினை உருவாக்கி அதில் உள்ள பெண்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கி அம்மாச்சி உணவகங்களை நடத்துவதற்கான அனுசரணையினை வழங்கி வருகிறது.

வவுனியாவை பொறுத்தவரை புதிய பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் இருக்கும் அம்மாச்சி உணவகம் மாத்திரமே எமது கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அதில் நேரடியான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.

ஏனைய இடங்களில் அந்தந்த நிறுவன தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கமைவாக அமுதம் விவசாய பெண்கள் அமைப்பிலிருந்து எம்மால் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களை அந்த அமைப்பே வழங்கியிருந்ததே தவிர விவசாயத் திணைக்களம் அதனை நடத்துவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவில்லை.

இதனால் வவுனியா வைத்தியசாலை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தில் அமைந்திருந்த உணவகங்கள் சரியான முறையில் வாடகைப் பணம் கொடுக்க முடியாமையினால் கடந்த சில நாட்களாக மூடப்பட்டுள்ளன. வாழ்வாதாரத்திற்காக சிரமப்படும் பெண்கள் என்பதால் அந்தத் தொகையை அவர்களால் வழங்கமுடியவில்லை.

விவசாய திணைக்களத்தின் நேரடி கண்காணிப்பில் இருக்கும் வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள அம்மாச்சி உணவகம் மாதாந்தம் 45 இலட்சம் ரூபாயை வருமானமாக ஈட்டுகிறது.

அங்கு 36 பெண் ஊழியர்கள் பணிபுரிந்து பயனடைகின்றனர். மூடப்பட்ட உணவகங்களில் பணிபுரிந்த பெண்களையும் நாம் அதனுள் உள்ளீர்த்துள்ளோம். அத்துடன் எமது நேரடியான கண்காணிப்புடன் பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியா வளாகத்திலும் எதிர்வரும் நாட்களில் அம்மாச்சி உணவகம் ஒன்று அமைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்மாச்சி உணவகங்கள் பெண்களின் வாழ்வாதாரத்தை மையமாக கொண்டு இயங்குகின்றமையால் வைத்தியசாலை மற்றும் பிராந்திய சுகாதார பணிமனை வளாகத்தில் அமைந்திருந்த உணவகங்களுக்கான வாடகை பணத்தினை அதனை நடத்தும் பெண்களால் வழங்க முடியவில்லை.

வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகத்திற்கு மாதவாடகையாக 90 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டியிருந்தது. அத்துடன் பல நோயாளர்களின் தேவை கருதி அசைவ உணவுகள் மற்றும் தேநீர் போன்றவற்றையும் உள்வாங்க வேண்டும் என்ற கேள்வியும் எழுந்தது.

அம்மாச்சி உணவகத்தின் கட்டமைப்புகளின் பிரகாரம் அதனை வழங்க முடியவில்லை. இவற்றை ஈடுசெய்ய முடியாமையினாலேயே குறித்த இரண்டு உணவகங்களும் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாக விவசாய திணைக்களத்தின் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார். (9-299)

# மீன்பிடி வள்ளங்கள் வழங்கல்



(முறிகண்டி)

நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கான மீன்பிடி வள்ளங்கள் மற்றும் மீன்குஞ்சு பராமரிப்பு வலைகள் என்பன இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கான அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு மேற்குறித்த பொருட்களை வழங்கி வைத்தார்.

தொடர்ந்து கிளிநொச்சி, இரணைமடு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளிலுள்ள நன்னீர் மீன்பிடி சங்கங்களிற்கு வள்ளங்களும், நன்னீர் மீன் குஞ்சுகளை பராமரிக்கும் வலைகளும் அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உத்தியோகத்தர்கள், மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-100)

# வவுனியா வைத்தியசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதான பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. டெங்கு அற்ற பிரதேசமாக எமது பகுதியினை வைத்திருப்போம் எனும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இச் செயற்றிட்டத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினர் மற்றும் வவுனியா பொலிஸார் இணைந்திருந்தனர்.

வைத்தியசாலை வளாகம், வாகனத் தரிப்பிடம், விடுதிகள் போன்றவற்றை சுகாதார பொதுப் பரிசோதகர்கள் பரிசோதனை மேற்கொண்டதுடன் வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் வவுனியா பொலிஸார், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர்கள், ஊழியர்கள் இணைந்து இச் சிரமதான பணியைச் முன்னெடுத்திருந்தனர். (9-250)



கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல மாணவிகளான தர்சினி மற்றும் கிருசாந்தி ஆகியோரின் நடன அரங்கேற்ற நிகழ்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவு சபை கலாசார மண்டபத்தின் இராசநாயகம் அரங்கில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்:-முறிகண்டி செய்தியாளர்)

# நிலத்தடி நீரை மாசுபடுத்தும் மலக்கழிவுகள்!

## மேய்ச்சல் தரவைகளில் வெளியேற்றப்படும் கழிவுகளால் கால்நடைகள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் வலி.கிழக்குக் (கோப்பாய்) பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் கொட்டப்படும் மலக்கழிவுகளால் மேய்ச்சல் தரவைகளும் நீர்நிலைகளும் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டது.

அதிகளவிலான விவசாயிகளையும் விவசாய நிலப்பரப்புக்களையும் கொண்ட கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நீர்வேலி மேய்ச்சல் தரவை பகுதிகளிலே நல்லூர் பிரதேச சபையால் மலக்கழிவுகள் மற்றும் உணவகக் கழிவுநீர் என்பன வெளியேற்றப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் அதிகளவிலான கால்நடைகளைக் கொண்ட பிரதேசமாக விளங்கும் கோப்பாய் பிரதேச செயலகப் பகுதியில் குறித்த பிரதேச சபையால் கொட்டப்படும் கழிவுகள் கால்நடைகளின் உணவு மற்றும் நீரில் கலப்பதால் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

நல்லூர் பிரதேச சபையால் மலக் கழிவகற்றல்களை மேற்கொள்வதற்காக வர்த்தக நிலையங்கள் நட்சத்திர விடுதிகள், வீடுகள் மற்றும் வைத்தியசாலைகள் என்பவற்றில் இருந்து பணத்தை அறவிட்டபோதும் பாதுகாப்பான கழிவகற்றல்களை மேற்கொள்ளாமல் மேய்ச்சல் தரவைகளில் வெளியேற்றுவது பொறுப்பற்ற செயலாகும் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர்.

நன்னீர் வளமுடைய வலி. கிழக்குப் பிரதேசத்தின் நிலத்தடி நீரை மாசுபடுத்தும் நோக்கோடு நல்லூர் பிரதேச சபை செயற்படுகிறதா? என்ற சந்தேகம் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்து நிலத்தடி நீரில் மலக்கழிவுகளின் செறிவு இருப்பதாக தரவுகள் கூறும் நிலையில் மக்களின் நலன்களை பேணுவதற்காக அமைக்கப்பட்ட பிரதேச சபைகள் தமது எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் மக்களின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவது தவறு எனவும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இவ்விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அப்பகுதி மக்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)



# இளைஞர்கள் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்ற பண்பாட்டுப்பெருவிழா







(குப்பிழான்)

வடக்கு- கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த இளைஞர்- யுவதிகள் இணைந்து தமிழினத்தின் கலை, கலாசார பாரம்பரியங்களைப் பேணும் வகையில் தைப்பொங்கல் விழாவையும், பண்பாட்டுப் பெருவிழாவையும் யாழ்.முற்றவெளி மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தினர்.

"ஒரு பிடி அரிசியில் உரிமைப் பொங்கல்" எனும் தொனிப் பொருளில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மலையக இளைஞர்கள், கலைஞர்களெனத் தன்னெழுச்சியாக ஒன்றிணைந்த இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்து உருவான "தமிழ் இளையோர் அமைப்பு" மேற்படி நிகழ்வை முதன் முறையாக யாழில் ஏற்பாடு செய்து நடத்தியுள்ளனர்.

இளைஞர்- யுவதிகளுடன் அவர்களது பெற்றோர்கள், சிறுவர்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலிருந்து வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எனப் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பொங்கல் நிகழ்வுகள் முடிவடைந்ததும் அனைவருக்கும் பொங்கல் பரிமாறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழர்களுடைய பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையிலான முட்டி உடைத்தல், கிறீஸ்மரம் ஏறுதல் உள்ளிட்ட விளையாட்டு நிகழ்வுகளும் மற்றும் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (ஜ-18)

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களை முடிவிற்குக் கொண்டுவர வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அண்மைக்காலமாக மேற்கொ... ளப்பட்டு வரும் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் இதுவரையில் பதிவான அத்தகைய சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்திருக்கும் விரிவான அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கையில் மனித உரிமைகள் அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பில் வெளிவரும் பல்வேறு செய்திகள் குறித்தும் நாம் அவதானம் செலுத்தியிருக்கிறோம்.

அவ்வறிக்கைகள் அல்லது செய்திகளின் பிரகாரம் 2019 மே மாதம் தொடக்கம் தற்போது வரை அரச அதிகாரிகள், மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு முன்னரே திட்டமிடப்படாத விதமான 12 இற்கும் மேற்பட்ட விஜயங்களை மேற்கொண்டிருப்பதை அறிந்து கொள்ள முடிவதுடன், அவற்றை அத்துமீறல் மற்றும் அச்சுறுத்தலாகவே கருத முடியும்.

இதற்கு மனித உரிமைகள் அமைப்புக்கள், ஊடக செயற்பாட்டாளர்கள் இலக்காக மாறியிருப்பதுடன் அவர்களது செயற்பாடுகள் குறித்து குற்ற விசாரணைப் பிரிவு, பயங்கரவாத விசாரணைப்பிரிவு, அரச புலனாய்வுச்சேவை உள்ளடங்கலாக இலங்கைப் பொலிஸாரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி சில ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும், சில ஊடக நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் உள்நாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இத்தகைய அச்சுறுத்தும் விதமான செயற்பாடுகள் மனித உரிமைகளைப் பாதுகாப்பவர்களுக்கும், அதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களது செயற்பாடுகளுக்கான பழிவாங்கலாகவும் அமையும்.

எனவே மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் ஊடாக அவர்கள் செயற்திறனுடன் தமது பணிகளை முன்னெடுப்பதை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம்.

அத்தோடு கருத்துச் சுதந்திரத்தையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாப்பதுடன் அதற்கு மதிப்பளித்துச் செயற்படுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் நாடளாவிய ரீதியில் இத்தகைய செயற்பாட்டாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களைப் பிரயோகிப்பதை முடிவிற்குக் கொண்டுவரும் விதமாக சட்டத்தை அமுலாக்கும் அனைத்துக் கட்டமைப்புக்களுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

இதுவரையில் பதிவான மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அத்துமீறல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்றதும், நியாய பூர்வமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என கேட்டுக் கொண்டுள்ளது. (ஜ)


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இரத்தினம்மா(பவி) கேசவலிங்கம்
திதி: தேய்பிறை ஏகாதசி 20.01.2020
பிறப்பு: 06.11.1952 இறப்பு: 04.02.2016

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்ததம்மா
ஆனாலும் உம் அன்பு முகத்தையும்
இன்பச்சிரிப்பையும் மறக்க
முடியவில்லையே எங்கள் தெய்வமே

(1928)

கொக்குவில் மேற்கு, கொக்குவில். தகவல்: குடும்பத்தினர்.

## திடீர் மழை காரணமாக
# பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் நெல் அறுவடையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் நெல்லை உலரவிடுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கை தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் நிலையில் நெல்லுக்கான உத்தரவாத விலை இன்மை, நோய்த்தாக்கம் என்பவற்றால் விவசாயிகள் பெரும்நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.**



மழை காரணமாக அறுவடை செய்த நெல்லை உலர வைக்க முடியாமலும் விளைந்த நெல்லை அறுவடை செய்ய முடியாமலும் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இதேவேளை சில வயல் நிலங்களில் வெள்ளநீர் வடிந்தோட முடியாது நெற்கதிர்கள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. விவசாயிகளிடமிருந்து அறுவடை செய்யும் நெல்லை கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபை இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை: இதனால் அறுவடை செய்யும் நெல்லை விவசாயிகளிடமிருந்து தனியார் நாளுக்கு நாள் குறைந்த விலைகளில் கொள்வனவு செய்து வருகின்றனர். கடந்த வாரம் முதல் 75 கிலோ எடை கொண்ட ஒரு மூடை சிவப்பு நெல் 3400 ரூபாவிற்கும் வெள்ளை நெல் 3600 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்பட்டு வந்தது.

தற்போது 75 கிலோ கொண்ட ஒரு மூடை சிவப்பு நெல் 2700 ரூபாவிற்கும் வெள்ளை நெல் 2500 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது என்றும் எதிர் வரும் நாட்களில் நெல்லின் விலை மேலும் குறைவடையும் போது தாங்கள் மேலும் நட்டத்தை எதிர் கொள்ளும் நிலையே காணப்படுகின்றது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே கடந்த ஆண்டுகள் போல் விவசாயிகளிடமிருந்து உரிய விலைகளில் நெல்லை கொள்வனவு செய்வதற்கும் நெல்லுக்கான உத்தரவாத விலையினை நடைமுறைப்படுத்துமாறும் இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் காலபோக செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## வவுனியாவில் ரெலோவின் மத்திய குழுக்கூட்டம்

(நெளுக்குளம்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் கட்சியின் வவுனியா அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

ரெலோவின் அடுத்த கட்ட நகர்வு, சமகால அரசியல் நிலவரங்கள், வரவிருக்கும் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இக் கலந்துரையாடலில் பேசப்பட்டது.

குறித்த உயர்மட்ட கலந்துரையாடலில் கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் உள்ளிட்ட உயர்மட்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர். (9-299)




## விபத்தில் பெண் காயம்

(நெளுக்குளம்)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குருமன்காடு பகுதியிலிருந்து புகையிரத வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் சிறு வீதியால் திரும்ப முற்பட்ட சமயத்தில் அதே வீதியில் பின்புறமாக பயணித்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250-299)

## அமைச்சர் பாலசூரிய கிளிநொச்சிக்கு விஜயம்

(முறிகண்டி)

சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் சமுர்த்தி மற்றும் சமூக சேவைகள் முன்னேற்பாட்டு மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு நிலைப்பாடுகளை கேட்டறிந்து கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் மு.சந்திரகுமார், சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-100)

## தரித்துநின்ற வாகனங்களால் போக்குவரத்திற்கு இடையூறு

(குருமன்காடு)

வவுனியா மன்னார் பிரதான வீதியில் நேற்று அதிகாலை தொடக்கம் வீதி ஓரத்தில் தரித்து நின்ற 10க்கு மேற்பட்ட கனரக வாகனங்களால் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிப்படைந்திருந்தது.

குறித்த கனரக வாகனங்களில் காற்றாலை அமைப்பதற்காக பீப்பாய்கள் காணப்பட்டன.

அவை ஏ-9 வீதியூடாக பயணிப்பதில் பாரிய சிக்கல்கள் காணப்படுவதனால் வவுனியா-மன்னார் பிரதான வீதியூடாக மன்னாரை சென்றடைந்து மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியூடாக (பூநகரி வீதி) யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப் படவுள்ளது.

பகல் நேரங்களில் வீதியில் பயணிப்பதனால் பாரிய போக்குவரத்து இடையூறு ஏற்படும் என்ற காரணத்தினால் நேற்று அதிகாலை தொடக்கம் வவுனியா மன்னார் பிரதான வீதியில் பட்டானிச்சூர், வேப்பங்குளம் , குருமன்காடு போன்ற பகுதியில் வீதி ஓரங்களில் தரித்து நிறுத்தப் பட்டுள்ளன. எனினும் வவுனியா - மன்னார் பிரதான வீதி குன்றும் குழியுமான பாதை என்பதனாலும் வீதியில் 3 இல் ஒரு பகுதியில் இவ் வாகனங்கள் தரித்து நிற்பதனால் போக்குவரத்து இடையூறு ஏற்படிருந்தது. (9-250)

## வன்னியில் கொங்கிறீட் வீடுகள் அமைக்கத் தீர்மானம்

(நெளுக்குளம்)

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியில் வன்னி மாவட்டத்தில் கொங்கிறீட் வீட்டுத்திட்டம் அமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் கொங்கிறீட் வீடுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையில் வன்னியில் அல்லது வடக்கில் அதனை அமைப்பதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது..

இதன்போது கருத்து தெரிவித்த மீள் குடியேற்ற அமைச்சின் பணிப்பாளர் பிரேமசந்திரன், மீள்குடியேற்ற அமைச்சினால் 28 ஆயிரம் கொங்கிறீட் வீடுகள் அமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது. அவற்றில் 7 ஆயிரம் வீடுகள் கிழக்கில் அமைக்கப்படவுள்ளன. வடக்கிலும் குறித்த வீடுகளை அமைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் கோரியதற்கிணங்க குறித்த கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது.

வீடுகளுக்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டால் அதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து வடக்கிலும் அதனை அமைக்க முடியும்.

அண்ணளவாக மூன்று கிழமைகளில் குறித்த வீடுகள் அமைத்து முடிக்க முடியும். இரண்டு அறைகளுடன் ஒரு சமையலறை, குளியலறை என 650 சதுர அடிப்பரப்பில் இந்த வீடுகள் அமையவுள்ளன. கூரைப்பகுதிக்கு ஓடுகளும் பொருத்தப்படும். அண்ணளவாக 70 வருட உத்தரவாதம் குறித்த வீடுகளிற்கு வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

வடக்கு மக்களிற்கும் குறித்த வீடுகளை வழங்கும் பொருட்டு மேலதிக ஆராய்வுகளிற்காக வன்னி மாவட்டங்களை சேர்ந்த அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், பொறியியலாளர்களை உள்ளடக்கிய குழு ஒன்று பதுளை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குறித்த கொங்கிறீட் வீடுகளை எதிர் வரும் வாரமளவில் நேரடியாக சென்று பார்வையிடுவது என்று தீர்மானிக்கப்பட்டதுடன், மூன்று மாவட்டங்களிலும் மாதிரி கொங்கிறீட் வீடு ஒன்றினை அமைப்பதுடன் அதனை பொதுமக்கள் பார்வையிடுவதன் மூலம் சந்தேகங்களை போக்க முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மீள் குடியேற்ற அமைச்சின் பணிப்பாளர், மன்னார் மாவட்ட அரச அதிபர் மோகன்றாஸ், வவுனியா மேலதிக அரச அதிபர் திரேஸ் குமார், பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முல்லை. மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கனகரத் தினம் ஆகியோர் கலந்து கொண்ட னர். (9-299)

## நெல்லிற்கான நிர்ணய விலையினை வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

நெல்லிற்கான நிர்ணய விலையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு விவசாயிகள் புதுக்குடியிருப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுதுள்ளனர்.

கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் 3,500 ரூபாவாக இருந்த நெல்லின் விலை தற்போது 2,500 ரூபாவாக குறைந்துள்ளது. அறுவடைகள் தொடங்கிய நாளிலேயே இவ்விலை காணப்பட்டால் அறுவடை முடியும் சந்தர்ப்பத்தில் 1,500 ரூபாவிற்கான நெல்லினை விற்பனை செய்வது என கேள்வி எழுப்பினர்.

பச்சை நெல்லிற்கான விலை அதிகரிக்கப்பட வேண்டும். நிறை 70 கிலோவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இது தொடர்பாக இறுக்கமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என விவசாயிகளால் தெரிவிக்கப்பட்ட நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடலை நடத்தி நெல்லிற்கான நியாயமான விலையினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை எடுப்பதாகத் தெரிவித்தார். (9-350)

## இரணைமடு குளத்தில் விடப்படும் முதலைகள் விவகாரத்துக்கு விரைவில் தீர்வு- டக்ளஸ்

(முறிகண்டி)

இரணைமடு குளத்தில் விடப்படுவதாக கூறப்படும் முதலைகள் விவகாரத்திற்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும், முதலைகள் காப்பகம் அல்லது மாற்றுத் திட்டங்கள் தொடர்பில் யோசனை முன்வைக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இரணைமடு குளத்திற்கான மீன்குஞ்சுகள் விடும் நிகழ்வுகளை தொடர்ந்து ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலைகள் விடயம் தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இவ்விடயம் தொடர்பிலே நான் அமைச்சரவையில் பேசுவேன்.

குறித்த பகுதியில் விடப்படும் முதலைகளுக்கான ஓர் காப்பகம் அல்லது பாதுகாப்பான வேறு முறைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம் எனவும், அதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (9-100)

# இரணைமடு குள நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வருடத்திற்கு 15 இலட்சம் மீன்குஞ்சுகள் தேவை

(முறிகண்டி)

இரணைமடு குளத்திற்கு வருடம் ஒன்றுக்கு 15 இலட்சம் மீன் குஞ்சுகள் தேவைப்படுகின்றன என இரணைமடு நன்னீர் மீன்பிடி கூட்டுறவு சங்கம் தெரிவித்துள்ளது. இரணைமடு குளத்தினை நம்பி 198 அங்கத்தவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த அங்கத்தவர்களை சார்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை பிரதானமாக கொண்டுள்ள இரணைமடுக் குளத்தில் வருடம் ஒன்றுக்கு 15 இலட்சம் மீன்குஞ்சுகள் விடப்படுமிடத்து வாழ்வாதாரத்தினை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கின்றனர். 2020 ஆம் ஆண்டில் தற்போது ஒரு இலட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மேலும் மீன்குஞ்சுகளை விடும்பட்சத்திலேயே வாழ்வாதாரத்தினை முன்னேற்றக்கூடிய வகையில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் நன்னீர் மீன்பிடியினை மேம்படுத்தவதற்காக வருடம் தோறும் குறிப்பிட்ட அளவிலான மீன்குஞ்சுகளை விடும் பட்சத்தில் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, நன்னீர் மீன்களிற்கான கிராக்கி தற்போது அதிகரித்து வருவதாகவும் வெளி மாவட்டங்கள் நோக்கி குறித்த மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இரணைமடு குளத்திலிருந்து சிறுபோகத்திற்காக நீர் திறந்து விடப்படும்போது மீன் குஞ்சுகள் வெளியேறிவிடுவதாகவும் அதனை பாதுகாப்பதற்காகத் திறந்து விடப்படும் பகுதியில் பாதுகாப்பு ஒன்றினை அமைத்துத் தருமாறும் அவர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். கடந்த வருடம் விடப்பட்ட மீன்குஞ்சுகளும் மீன்கள் மற்றும் இறால் வகைகள் இவ்வாறு நீருடன் சென்றமையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கும் அவர்கள் அடுத்துவரும் மாதங்களில் சிறுபோக செய்கைக்கான ஏற்பாடுகள் இடம்பெறவுள்ள நிலையில் இவ்விடயத்தினை விரைந்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-100)

# சமூக சீர்கேட்டினை நிறுத்தக்கோரி கிளி.விநாயகபுரம் மக்கள் போராட்டம்



(முறிகண்டி)

சமூக சீர்கேட்டினை நிறுத்த கோரி கிளிநொச்சி விநாயகபுரம் மக்கள் நேற்று முன்தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். தமது பிரதேசத்தில் நீண்ட காலமாக காணப்படும் விபச்சார விடுதியுடனான சமூகச் சீர்கேடு தொடர்பில் பல தரப்பினருடைய கவனத்திற்கு எடுத்து சென்ற போதிலும் குறித்த செயற்பாடானது தொடர்ந்தும் இடம்பெற்று வருவதால் தமது கிராமத்திற்கு அவப்பெயர் காணப்படுவதாகவும் இதனால் தாம் சமூகம் சார்ந்த பல பிரச்சினைகளிற்கு முகம் கொடுத்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த செயற்பாட்டை முழுமையாக நிறுத்தக் கோரி நேற்று முன்தினம் குறித்த பகுதி மக்கள் சிலர் இணைந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதனால் எதிர்காலத்தில் மோசமான விளைவுகள் ஏற்படக்கூடிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள், குறித்த சமூக சீரழிவிற்கு 15 வயதிற்கு குறைத்த சிறுவர்களும் செல்வதை அவதானித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த சமூகவிரோத செயற்பாட்டினை கட்டுப்படுத்தக் கோரியும் நற்பெயரை இழந்து நிற்கும் தமது கிராமத்திற்கு நன்மதிப்பினை ஏற்படுத்தித் தருமாறு கோரியும் குறித்த போராட்டத்தை அப்பகுதி மக்கள் முன்னெடுத்தனர். இவ்விடயம் தொடர்பில் அதிகாரிகள், பொலிஸார் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொண்டு கிராமத்தின் நற்பெயரை மீள பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர்கள் தெரிவித்தனர். (9-100)




# யாழ்.பல்கலைக்கழக வவு.வளாகத்தில் கணனி நிகழ்ச்சி வடிவமைப்பு போட்டிகள்



(நெளுக்குளம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களை உள்ளடக்கி ஐ.சி.ரி.சி.எஸ்.இனால் நடத்தப்படும் Hackintra (ஹக்கின்ட்ரா) நிகழ்வானது கடந்த 18,19 ஆகிய தினங்களில் நடைபெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வளாகத்தின் முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகியது.

பிரயோக விஞ்ஞான பீடத்தினால் 4 ஆவது முறையாக இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இம்முறை மேலும் பல புதிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கியுள்ளது. இந்நிகழ்விற்கு நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் இருந்து பல்கலைக்கழக குழுக்கள் போட்டியில் பங்குபற்றியிருந்தன.

இந்நிகழ்வின் பிரதான நிதி அனுசரணையாளரான தேசிய அறிவியல் நிறுவனத்துடன் வேறு பல நிறுவனங்களும் அனுசரணை வழங்கியிருந்தன.

ஆரம்ப நிகழ்வில் பௌதீக விஞ்ஞான பிரிவின் துறைத் தலைவர் எஸ். திருக்குமாரன், கணக்காளர் தகவல் தொடர்பாடல் மற்றும் கணனி விஞ்ஞான கழகத்தின் சிரேஷ்ட கணக்காளர் கலாநிதி ஆர்.நகுலன், கலாநிதி ரி.கோகுலன் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு கணனி நிறுவனங்களின் உயரதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

# மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்திற்கு அமைச்சர் விமல் வீரவன்ச விஜயம்



(மன்னார்)

மன்னாரிற்கு கடந்த சனிக்கிழமை விஜயம் செய்த அமைச்சர் விமல் வீரவன்ச மன்னார் பெரிய கடை பகுதியில் அமைந்துள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்திற்கு (மாந்தை சோல்ட் லிமிட்டெட்) விஜயம் செய்திருந்தார்.

அங்கு சென்ற அமைச்சர் உப்பு உற்பத்தி நிலையத்தை பார்வையிட்டதோடு, அங்குள்ள பிரச்சினைகள், குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டதுடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

அத்துடன் வவுனியா பூந்தோட்டம் கைத்தொழில் பேட்டைக்கு சென்ற கைத்தொழில் அமைச்சர், கைத்தொழில் முனைவோரின் பிரச்சினைகள தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த சந்திப்பில் வவுனியா வர்த்தக சங்கத்தலைவர், தொழில் முனைவோர், கைத்தொழில் உற்பத்தியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250-285)

# முல்லை.உண்ணாபுலவு பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர்கள் இல்லாததால் நோயாளர்கள் அவதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உண்ணாப்புலவு பகுதியில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர்கள் இல்லாத நிலைமையின் காரணமாக நோயாளர்கள் அவதிப்படும் நிலை காணப்படுகின்றது .

குறிப்பாக நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வருகைதந்த நூற்றுக்கணக்கான மக்கள் திரும்பி சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

மிக நீண்டகாலமாக இயங்கிவரும் இந்த வைத்தியசாலையில் நிரந்தரமாக கடமையில் இருந்த வைத்தியர் தற்காலிக இணைப்பில் புத்தளம் மாவட்டத்திற்கு மாற்றலாகி சென்ற நிலையிலும் ஏற்கனவே தற்காலிகமாக கடமையாற்றிய வைத்தியர் வேறு இடத்துக்கு மாற்றலாகி சென்றதன் காரணமாகவும் வைத்தியர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது.

வைத்தியசாலையின் இந்த நிலைமை குறித்து நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அவசர நிலைமைகளின் போதும் சிகிச்சை பெறுவதற்காகவும் வருகின்ற நேரங்களில் குறித்த வைத்தியசாலையில் வைத்தியர் இல்லை எனக்கூறும் நிலைமையே காணப்படுகின்றது. மிக நீண்டகாலமாக போருக்கு முன்னர் வினைத்திறனான சேவை ஆற்றிய இந்த வைத்தியசாலை இன்று வைத்தியர்கள் இல்லாது இயங்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சிகிச்சை பெறுவதற்காக வருகைதந்து திரும்பிச்செல்லும் நிலையே காணப்படுகின்றது எனச் சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள் தெரிவித்தனர்.

நோயாளர்கள் வைத்தியர் இல்லாமையால் அவதிப்படும் நிலை குறித்து முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சுகந்தன் கருத்து தெரிவிக்கையில்,

நான் புதிதாக வருகைதந்த பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி என்ற நிலைமையில் இந்த விடயங்கள் குறித்து ஆராய்ந்து உள்ளூர் வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்களிடம் இந்த வைத்தியசாலைக்குரிய கடமையையும் கவனித்து கொள்ளுமாறு கேட்டிருந்தேன். அவர்கள் அதனை மறுத்திருந்தனர். பிரதானமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள வைத்தியர்களை சந்தித்து இந்த வைத்தியசாலையின் கடமைகளையும் கவனித்துக்கொள்ளுமாறும் கேட்டிருந்தேன். ஆனால் அங்கேயும் கடமைகள் இருக்கின்ற நிலைமையில் தங்களால் முடியாது என அவர்களும் மறுப்பு தெரிவித்துள்ளனர். இந்த நிலைமைகள் குறித்து முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் தலைமையில் நடைபெற்ற சுகாதார திணைக்களத்தினுடனான சந்திப்பிலும் இந்தப் பிரச்சினை குறித்து தெரியப்படுத்தியுள்ளேன்.

இதற்கு இரண்டு தற்காலிக தீர்வுகளை முன்வைத்துள்ளேன். இந்த வைத்தியசாலைக்கான நிரந்தர வைத்தியரை நியமிக்கும் வரை தற்காலிகமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் (மாஞ்சோலை) சிறுநீரக பிரிவில் இருக்கின்ற வைத்தியர்களில் ஒருவர் இங்கே வருகைதந்து கடமைகளை கவனித்துக்கொள்ளலாம் அல்லது போதனா வைத்தியசாலையிலிருந்து உள்ளக பயிற்சிகளை முடித்து நியமனத்துக்காக காத்திருக்கும் வைத்தியர்களில் ஒருவரை நியமிப்பதன் மூலம் இந்த நிலைமைகளை தீர்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (9)

# பாரதம்

## தோகைமலை ஜல்லிக்கட்டு
## காளைகள் முட்டியதில் 45 பேர் காயம்



(சென்னை)

தோகைமலை அருகே நடைபெற்ற ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டியதில் 45 பேர் காயமடைந்தனர். கரூர் மாவட்டம், தோகைமலை அருகே ராச்சாண்டார் திருமலையில் பொங்கல் விழாவையொட்டி ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டு நடத்தப்படும். அதே போல இந்த ஆண்டுக்கான ஜல்லிக்கட்டு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஜல்லிக்கட்டில் பங்கேற்ற காளைகளை கால்நடை மருத்துவக்குழுவினர் பரிசோதனை செய்தனர். இதேபோல் மாடுபிடி வீரர்களுக்கும் டாக்டர் குழுவினர் உடல் தகுதி பரிசோதனை செய்தனர். பின்னர் மாடுபிடி வீரர்கள், முன்னிலையில் ஜல்லிக்கட்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

முதலில் வாடிவாசலில் இருந்து கோவில் காளை அவிழ்த்து விடப்பட்டது. இதையடுத்து வாடிவாசலில் இருந்து அலங்கரிக்கப்பட்ட காளைகள் ஒவ்வொன்றாக அவிழ்த்து விடப்பட்டன.

அப்போது பொதுமக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். சீறிப்பாய்ந்து வந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் அதன் திமிலை பிடித்து அடக்கினர். சில காளைகள் தன்னைப் பிடிக்க வந்த வீரர்களை தூக்கி வீசி சென்றன.

இந்த ஜல்லிக்கட்டில் சீறிப்பாய்ந்து வந்த காளைகள் முட்டியதில் வீரர்கள் 14 பேர், காளைகளின் உரிமையாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் 31 பேர் என மொத்தம் 45 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து காயமடைந்தவர்களுக்கு அங்கு தயார் நிலையில் இருந்த மருத்துவக் குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (2)

## மாற்றுத்திறனாளிகள் இல்லத்தில் தீ; எண்மர் பலி, 29 பேர் காயம்

(பேர்லின்)

ஜேர்மனியில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் 29 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜேர்மனியின் வடமேற்கு எல்லையில் உள்ள வெஜ்பிரிட் என்ற நகரின் மாற்றுத் திறனாளிகளுக்கான இல்லம் ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

விபத்தினையடுத்து மீட்புப் படையினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். ஜேர்மனியில் கடந்த மூன்று தசாப்தங்களுக்குள் இடம்பெற்ற இரண்டாவது பெரிய தீ விபத்து இது வாகும்.

2010 ஆம் ஆண்டில், ப்ராக் நகரில் வீடற்ற மக்கள் அடிக்கடி பயன்படுத்திய கைவிடப்பட்ட கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

1995 இல் ஜேர்மன் தலைநகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2)

## ஹரி,மேகன் அரச தலைப்புக்களை இனிமேல் பயன்படுத்த மாட்டார்கள்
### பர்க்கிங்காம் அறிவிப்பு

(இங்கிலாந்து)

இளவரசர் ஹரி மற்றும் மேகன் இனிமேல் அரச தலைப்புகளை பய்ன்படுத்தமாட்டார்கள் என மகாராணி சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் அரச கடமைகளுக்காக பொது நிதியைப் பெறமாட்டார்கள் என்றும் பக்கிங்காம் அரண்மனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இளவரசர் ஹரி மற்றும் மேகன் ஆகியோருக்கு பிரித்தானிய அரச குடும்பத்தின் சிரேஷ்ட உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு இரண்டாம் எலிஸபெத் மகாராணி கடந்த வாரம் அனுமதி வழங்கியிருந்தார்.

இந்நிலையில் மகாராணி சார்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், "பிராக்மோர்



வீட்டை புதுப்பிப்பதற்கான அரச மானிய செலவுகளை திருப்பிச் செலுத்துவதற்கான தங்கள் விருப்பத்தை பகிர்ந்து கொண்டனர்.

இது அவர்களின் பிரித்தானிய குடும்ப வீடாகவே இருக்கும்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த விபரங்கள் குறித்து பக்கிங்ஹாம் அரண்மனை கருத்து தெரிவிக்கவில்லை. இந்த புதிய அறிக்கையானது 2020 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## இராணுவ பயிற்சி முகா

## 60 இராணுவ வீரர்கள் ப

(சனா)

**ஏமன் நகரமான மரிபில் ஒரு இராணுவப் பயி ஹவுதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இராணுவ வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்**



## ஈரானிய ஆன்மீ அவதானமாக இரு
### ட்ரம்ப் எச்சரிக்கை

(டெஹ்ரான்)

ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி காமினி, தனது வார்த்தைகள் தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானிய தலைநகர் டெஹ்ரானில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வழிபாட்டின் பின்னர் உரையாற்றிய ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி காமினி, அமெரிக்காவை கடுமையாக விமர்சித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே டொனால்ட் ட்ரம்ப் இதனைத் தெரிவித்தார். இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது.

'ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அலி காமினி அண்மைக்காலமாக அந்த மரியாதைக்கு உரியவராக இல்லை. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை குறித்து சில மோசமான கருத்துகளை தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகள் அமெரிக்காவின் எடுபிடிகளாக செயற்படுகின்றன என விமர்சித்திருக்கிறார். ஈரானின் பொருளாதாரம் சிதைந்துள்ளது. அந்நாட்டு மக்கள் துன்பத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந்த சமயத்தில் அவர் தனது வார்த்தைகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்' எனப் பதிவிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கு பிறகு, எட்டு வருடங்களில் முதன்முறையாக ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா



## காட்டுத்தீயிற்கு ம பெருக்கெடுத்த வெ

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீயால் எண்ணிலடங்காத சேதங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது அங்கு கனமழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்தது. கடந்த மூன்று மாதமாக அவுஸ்திரேலியாவை வாட்டிய காட்டுத்தீயை அணைக்க, பல்லாயிரக்கணக்கான தீயணைப்புப் படையினர் போராடி வருகின்றனர்.

இன்னும் காட்டுத்தீயை முழுமையாக கட்டுக்குள் கொண்டுவர முடியாமல் அந்நாட்டு அரசாங்கம் திணறி வருகின்றது.

# ழுகாம் மீது தாக்குதல்

## ர் பரிதாபமாக உயிரிழப்பு

**வப் பயிற்சி முகாம் மீது ஈரானுடன் இணைந்த கிழமை தாக்குதல் நடத்தியது. இதில் 60 ழந்தனர்.**



இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்தனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களுடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அல் எக்பரியா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது.

ஈரானுக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையில் ஏமனில் ஒரு பினாமி போர் நடந்து வருகிற நிலையில் ஹவுதிகள் ஈரானின் கைக்கூலிகள் என தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் சனா மற்றும் ஏமனின் பெரும்பாலான நகர மையங்களை வைத்திருக்கும் ஹவுதிகள் ஈரானின் சார்பாக இயங்குகின்றது என்ற குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது.

இதனால் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த தாக்குதலுக்கு ஹவுதி போராளிகள் உடனடியாக பொறுப்பேற்க மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# உலகின் மிகச் சிறிய மனிதர் 27வது வயதில் காலமானார்



(காத்மண்டு)

உலகின் மிகச்சிறிய மனிதர் என்ற கின்னஸ் சாதனையை தன் வசம் வைத்திருந்த ககேந்திர தபா மகர், தனது 27 வது வயதில் காலமானார்.

நிமோனியா காய்ச்சலால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

நேபாளத்தை சேர்ந்த ககேந்திர தபா மகர் பெற்றோருடன் வசித்து வந்தார்.

திடீரென அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதை அடுத்து, காத்மண்டுவிலிருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள போகாராவில் உள்ள ஒரு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள ககேந்திர தபா மகருக்கு இதயமும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதையடுத்துத் தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையிலேயே உயிரிழந்தார். (ஜ-2)

# ன்மீகத் தலைவர் இருக்க வேண்டும்




அலி காமினி கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையை தலைமையேற்று நடத்தினார்.

அந்நாட்டின் தலைமை மதகுருவும் தலைவருமான காமினி, தொழுகைக்கு பிறகான உரையில் அமெரிக்காவை கடுமையாக விமர்சித்தார்.

இதன்போது அவர் கூறுகையில், 'டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு, ஒரு தீய அரசு. ஈராக்கில் ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல், அமெரிக்காவின் முகத்தில் விடப்பட்ட அறை' என கடுமையாக விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ஈரான் மக்களை அமெரிக்கா நஞ்சு தடவிய வாளால் குத்தும்

## ஈரான் தலைவர் சுட்டிக்காட்டு



(டெஹ்ரான்)

ஈரான் மக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் போதெல்லாம் பொய் கூறும் அமெரிக்கா, ஈரான் மக்களை நஞ்சு தடவிய வாளால் குத்தும் என ஈரானின் ஆன்மீக தலைவர் அயத்துல்லா அலி காமினீ தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டுக்கு பிறகு, எட்டு வருடங்களில் முதன் முறையாக ஈரானின் அதிஉயர் தலைவர் அயத்துல்லா அலி காமினி கடந்த (வெள்ளிக்கிழமை) தொழுகையை தலைமையேற்று நடத்தினார்.

அந்நாட்டின் தலைமை மதகுருவும் அதி உயர் தலைவருமான காமினி, தொழுகைக்கு பின்னரான உரையில் அமெரிக்காவை கடுமையாக விமர்சித்தார்.

இதன்போது அவர் கூறுகையில், 'டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு, ஒரு தீய அரசு. ஈராக்கில் ஈரான் நட்த்திய ஏவுகணைத் தாக்குதல், அமெரிக்காவின் முகத்தில் விடப்பட்ட அறை.

காசிம் சுலைமானியின் இறுதிச் சடங்கு மற்றும் ஈரானின் பதிலடி ஆகியவை வரலாற்றில் ஏற்பட்ட திருப்புமுனை' எனக்கூறினார்.

மேலும், அமெரிக்காவை பயங்கரவாதக் குழுவாக அறிவித்துள்ள ஈரானின் உயரடுக்கு பாதுகாப்புப் படை பற்றி பேசிய அவர், அது மனித மதிப்புகளை கொண்டிருக்கும் ஒரு மனிதநேய அமைப்பு என குறிப்பிட்டார். (ஜ-2)

# மத்தியில் வெள்ளநீர்

இந்த நிலையில் கிழக்கு அவுஸ்திரேலியாவின் பெரும்பகுதி முழுவதும் கனமழை பெய்து வருகின்றது. குறிப்பாக கடந்த 12 மணி நேரத்தில் குயின்ஸ்லாந்து மாகாணத்தில் 300 மில்லி மீற்றர் மழை பதிவாகி உள்ளது.

3 மாதங்களில் பெய்ய வேண்டிய மழை ஒருநாளில் பெய்ததால் குயின்ஸ்லாந்து வீதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது என அவுஸ்திரேலிய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் கிழக்கு பகுதியில் செப்டெம்பர் மாதம் முதல் காட்டுத் தீ ஏற்பட்டது. இதன் காரணமாக மில்லியன் ஹெக்டேயர் கணக்கில் நிலங்கள் தீக்கி ரையாகின.

இதில் 2,000 வீடுகள் எரிந்தன. 28 பேர் உயிரிழந்தனர். கோலா கரடி, கங்காரு எனப் பல அரிய வகை விலங்குகள் உட்பட இலட்சக்கணக்கான வனவிலங்குகள் இறந்துள்ளன. (2)

# 1000ரூபாய் சம்பளம் வழங்காவிட்டால்

# தோட்டங்களை அரசிடம் ஒப்படைக்கவும்

## அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**பெருந்தோட்ட நிறுவனங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்க முடியாவிட்டால் தோட்டங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறுமாறு இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**



நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பெருந்தோட்ட நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரும் நிதியை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது. ஜனாதிபதி தேர்தலின்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்குவதாக ஜனாதிபதி வாக்குறுதி வழங்கினார்.

ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை. இருந்தாலும் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற அடிப்படையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு முடியுமாக இருந்தால் இருக்க முடியும். முடியாவிட்டால் தோட்டங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு செல்ல முடியும்.

பெருந்தோட்ட நிறுவனங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்க்க எம்மால் முடியும். வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. எதிர்வரும் பொதுத்தேர்தல் வரைக்கும் எமக்கான நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது முறையான வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்து மக்களுக்கான சேவையை தொடர்ந்தும் நாம் முன்னெடுப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில்

## புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் சுற்றுப்பயணம்



(கொழும்பு)

இலங்கை இந்தியா பவுண்டேசன் நிதிப்பங்களிப்பில் மாணவர் பரிமாற்றம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் கடந்த மாதம் 9 - 15ஆம் திகதிவரை இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இவ்வாறான பயணங்கள் இந்தியத் துணைத் தூதரகத்தினால் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



**பசுமைச் சுவடுகள் அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான "திரையிடலும் கலந்துரையாடலும்" நிகழ்வு குடத்தனை மேற்கு, வலிக்கண்டி முன்பள்ளிக் கட்டடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் "Iceage-1" திரைப்படம் திரையிடப்பட்டது.**

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அறிவா? செல்வமா?

இந்த உலகத்திலே நாம் நல்லபடியாக இருக்க வேண்டும் என்றால் அதுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு! ஒன்று செல்வம், இன்னொன்று அறிவு. சரி... இது இரண்டிலே சிறந்தது எது? என்று ஒரு கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்கிறது? இதே கேள்வியை ஹஸ்ரத் அலி அவர்களிடம் கேட்டார்களாம். அவர் ஒரு பெரிய அறிஞர். கேள்வி கேட்டவர்களும் சாதாரண ஆட்கள் இல்லை.. இவர்களும் அறிஞர்கள்.

ஒரு நாள் ஹஸ்ரத் அலியிடம் பத்து அறிஞர்கள் வந்தார்களாம். ஐயா!நாங்கள் பத்துப் பேரும் உங்களிடம் ஒரே கேள்வியைத் தான் கேட்க வந்திருக்கிறோம்.ஆனால் எங்கள் பத்துப் பேருக்கும் நீங்கள் தனியாக பதில் சொல்ல முடியுமா? என்று கேட்டிருக்கிறார்கள்.அதாவது அவர்கள்.. ஒரே கேள்விக்கு அவர்களிடமிருந்து பத்துவிதமான பதிலை எதிர்பார்க்கிறார்கள்.சரி கேளுங்கள் என்ன கேள்வி என்றார் இவர். அப்பொழுதுதான் அவர்கள் கேட்டார்கள் செல்வம், அறிவு இரண்டிலே சிறந்தது எது? என்று. ஹஸ்ரத் அலி என்ன செய்தார் தெரியுமா? அவர்களை ஒவ்வொருவராகக் கூப்பிட்டார்.ஒவ்வொரு விதமான பதிலைச் சொல்லி அனுப்பினார். முதலிலே ஒருவரைக் கூப்பிட்டார் சொன்னார்.

அறிவு என்பது தீர்க்கதரிசிகள். ஞானிகள் மகான்கள் இவர்களுடைய பரம்பரைச் சொத்து.ஆனால் செல்வமோ கொடுங்கோலரின் ஆயுதம். அதனாலே அறிவுதான் சிறந்தது என்றார்.இரண்டாவது ஆளைக் கூப்பிட்டார். உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள்தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனா அறிவு தான் உங்களை எப்பவும் காப்பாற்றுமே. ஆகவே அறிவுதான் சிறந்தது என்றார்.

மூன்றாவது ஆளைக் கூப்பிட்டார். செல்வனுக்கு எப்பவும் விரோதிகள் அதிகம்.ஆனால் அறிஞருக்கு நண்பர்கள் அதிகம். அதனாலே அறிவுதான் சிறந்தது என்றார்.அடுத்தவரைக் கூப்பிட்டார் .செல்வம் அடுத்தவர்களுக்குக் கொடுக்க கொடுக்கக் குறையும். ஆனால் கல்வியோ அதிகரித்துக் கொண்டே வரும்அறிவுதான் சிறந்தது என்றார்.

இன்னொருத்தரைக் கூப்பிட்டார். அறிவுள்ளவன் எப்பவும் அதை அடுத்தவர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டே இருப்பான். அதனாலே அவனிடம் தாராளத்தன்மையிருக்கும் . ஆனால் செல்வனிடம் கஞ்சத்தனம் தான் இருக்கும். அதனாலே அறிவு தான் சிறந்தது என்றார். ஆறாவது நபரைக் கூப்பிட்டார். செல்வத்தை கள்வர்கள் திருடிக்கொண்டு போக முடியும் ஆனால் அறிவைக் கவர முடியாது என்றார்.

ஏழாவது நபரைக் கூப்பிட்டார். செல்வம் கால ஓட்டத்திலே அழிந்து விடும்.ஆனால் அறிவைக் கால ஓட்டம் ஒன்றும் செய்ய முடியாது.ஆகவே அறிவுதான் சிறந்தது என்றார். எட்டாவது ஆளைக் கூப்பிட்டுச் சொன்னார் செல்வத்துக்கு எப்பவும் எல்லை உண்டு. நிறை உண்டு. அளவு உண்டு.கணக்கு உண்டு.ஆனால் அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லை எதுவும் கிடையாது. அதனாலே அதுதான் சிறந்தது என்றார்.

அடுத்தவரைக் கூப்பிட்டார்.செல்வம் உள்ளத்திலே உள் ஒளியைப் போக்கிவிடும் . இருட்டை உண்டாக்கிவிடும்.விரிந்த மனப்பான்மையை குறுக்கலாக்கிவிடும்.ஆனால் அறிவு அப்படியில்லை !இருண்ட உள்ளத்திலே ஒளியைப் பாய்ச்சி அதை விசாலப்படுத்துவது...அதுதான் சிறந்தது என்றார்.

கடைசியாக பத்தாவது நபரைக் கூப்பிட்டார். செல்வம் மனதிலே செருக்கை உண்டாக்குகிறது. ஆணவத்தை ஏற்படுத்துவது. அதனாலே நானே கடவுள் என்று நினைக்கிற அளவுக்கு மனிதனைத் தாழ்த்தி விடுகிறது.ஆனால் அறிவு பணிவையும் பண்பாட்டையும் வளர்க்கிறது .அதனாலே தான் சிறந்தது என்றார்.

ஆக இப்படி பத்துப் பேருக்கும் பத்து விதமாக பதில் சொன்னது மூலமாக ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவுதான் செல்வத்தைவிட சிறந்தது எனப் பத்து காரணங்கள சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்த அறிஞர் பத்து பேர் கேட்ட ஒரே கேள்விக்குப் பத்துப் பதிலைச் சொன்னார். எனக்கு வேண்டிய ஒருவர் பத்துப் பேர் கேட்ட கேள்விக்கு ஒரே பதிலைச் சொல்லி சமாளித்து விட்டார் சேர்.கேள்வி என்ன தெரியுமா? என்னிடம் வாங்கிய கடனை எப்பொழுது திருப்பித் தரப் போகிறீர் கள்.இதுதான் அந்தப் பத்துப் பேரும் கேட்ட ஒரு கேள்வி.

இந்த மாதம் 26ஆம் திகதி தந்துவிடுகிறேன் என்கிற ஒ்ரே பதிலைச் சொல்ல அவ்வளவு பேரையும் அனுப்பி வைத்துவிட்டார் இவர். எல்லோரும் போனதுக்கு அப்புறம் இவரைத் தனியாகக் கூப்பிட்டு அது என்ன சேர் கணக்கு. 26 ம் திகதி அன்றைக்கு என்ன அதிசயம் நடக்கப் போகிறது என்று கேட்டேன். அதிசயம் அன்றைக்கு இல்லை சேர்.அதுக்கு முதல் நடக்க போகிறது என்றார். விபரமாகச் சொல்லுங்கள் என்றேன்.வேற ஒன்றுமில்லைங்க...26ஆம் திகதி தானே எல்லோரையும் வரச்சொல்லியிருக்கிறேன்.அதுக்கு முதல் நாளே நான் புறப்பட்டு தலைமறைவாக ஆகிடப்போகிறேன் என்றார் ரொம்பப் பெருமையாக!

# மட்டக்களப்பில் பெரும்போக அறுவடை நியாய விலையில் நெல் கொள்வனவு

## அரச அதிபர் அறிவிப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அறுவடைக்குத் தயாராக உள்ள பெரும்போக நெல் நியாயமான விலைக்கு வாங்கப்படும் என மாவட்டத்தின் அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் நெல் விற்பனையில் விவசாயிகள் எதிர்நோக்கும் விலைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக அரசாங்க அதிபர் தலைமையில் விசேட கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் நெல் விலை நிர்ணயிக்கப்பட்டு விவசாயிகள் நட்டமடையாத வகையில் நெல் கொள்வனவு செய்வதற்காக சகல விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் அடுத்தவாரம் முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

நெல்லைக் களஞ்சியப்படுத்துகின்ற செயற்பாட்டில் சில சவால்கள் காணப்படுவதாகவும் அதற்காக 9 களஞ்சியசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அதற்கும் மேலதிகமாக 6 களஞ்சியசாலைகள் புதிதாக அடையாளம் காணப்பட்டு அவசர திருத்தப் பணிகளை மேற்கொண்டு அங்கு நெல்லை களஞ்சியப்படுத்துவது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களஞ்சியசாலைகளுக்கு மேலதிகமாக திருகோணமலை, வெலிகந்தை, பொலநறுவை போன்ற பகுதிகளிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான களஞ்சிய சாலைகளில் களஞ்சியப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 60,459 ஹெக்டேயரில் நெல் பயிரிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் பணிப்புரைக்கமைவாக மாவட்ட மட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையினூடாக நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பேருந்துகளில் பாடல் இசைக்கத்தடை; மீறினால் 1955 இற்கு அறிவிக்கவும்

(கொழும்பு)

தனியார் பேருந்துகளில் பயணிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகும் வகையில் அதிக சத்தத்துடன் பாடல்கள் மற்றும் காணொலிகளை ஒலி, ஒளிபரப்புவதற்கான தடை முதல் அமுலுக்கு வந்துள்ள நிலையில் இதனை மீறி செயற்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ள பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தேவையேற்படின் பேருந்துகளில் பாடல் ஒலி, ஒளிபரப்பு செய்வதை முற்றாக தடைசெய்வதற்கு சட்டம் உருவாக்குவதாகவும் தெரிவித்தார்.

தனியார் பேருந்துகளில் அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்பப்படும் பட்சத்தில் அது குறித்து முறைப்பாடுகளை 1955 என்ற தொலைபேசி மூலம் அறிவிக்க முடியும் என அவர் தெரிவித்தார். பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு அமைய பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஐ)

# செயற்பட்டு மகிழ்வோம் நாளை

(கொடிகாமம்)

கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.மகிந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)



யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கொம்பன்துறை சனசமூக நிலையத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்களை அண்மையில் வழங்கினார்.
(படம்:- மகாலிங்கம்)

# 37 ஆவது ஆண்டு நிறைவைக்கொண்டாடும் அபிவிருத்தி லொத்தர் சபை

வாழ்வை ஒளிமயமாக்கும் அபிவிருத்தி லொத்தர் சபை இந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதியன்று தனது 37 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது. இலங்கை வாழ் மக்களுக்காக உயர் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதியன்று ஆரம்பிக் கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் நிலையம் அன்றிலிருந்து இன்றுவரை கடந்து வந்த தனது 37 வருடக் காலப்பகுதியினுள் அடையப்பெற்ற மைல்கல்களைப் போன்றே அது உருவாக்கிய வெற்றியாளர்களுக்கும் அளவே இல்லை. இந்நாட்டு மக்கள் லொத்தர் சீட்டொன்றிற்காக செலவிடப்படும் இருபது ரூபாவினை மீளவும் அவர்களுக்கு மத்தியில் கொண்டு செல்லும் அபிவிருத்தி லொத்தர் சபை இந்நாட்டில் அநேகமானவர்களின் வாழ்க்கையை ஒரே இரவில் அதிர்ஷ்டத்துக்கு உட்படுத்துவதோடு நாட்டிற்காக சுகாதார மற்றும் கல்விசார் பணிகளுக்கான பங்களிப்புக்களையும் வழங்குகின்றது.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் 2.2 மில்லியன் ரூபா அளவுடைய நிதியை முதலீடு செய்து இச் சபை ஆரம்பிக்கப்படுவது ஜனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நிதியத்தின் நிதியியல் சார் அடிப்படையை பலப்படுத்துவதே அதன் இறுதி எதிர்பார்ப்பாகும். அதற்கமைய ஜனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக தனது பங்கிலாபத்தை நன்கொடை செய்யும் ஒரே அரச நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை விளங்குகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை அதன் ஆரம்ப காலங்களில் அபிவிருத்தி லொத்தர் நிலையம் என அறிமுகப்படுத்தப்பட்டதோடு அதன் பின்னர் அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கைப் பொறுப்பு என 1993 ஆம் ஆண்டில் பெயரிடப்பட்டது. 1997 ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதியன்று 1997 இலக்கம் 20 இனையுடைய அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் மூலம் இந்நம்பிக்கைப் பொறுப்பு அபிவிருத்தி லொத்தர் சபை என பெயர் மாற்றம் பெற்றது.

நாளுக்கு நாள் நாட்டிற்காக வழங்கிய பங்களிப்பினை துரிதப்படுத்தி முன்னோக்கிச் சென்ற அபிவிருத்தி லொத்தர் சபை 1983 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஜனாதிபதி நிதியத்திற்காக அபிவிருத்தி லொத்தர் சபை வழங்கிய தாராளப் பங்களிப்புத் தொகை 27,115,374,346 ரூபாவாகும். ஆரம்பம் முதல் இன்றுவரை பல்கலைக்கழக மாணவர்களின் உயர் கல்விக்காக வழங்கிய மகாபொல புலமைப் பரிசில்களின் அளவு மூன்று இலட்சத்து இருபத்தைந்தினை எட்டியுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் ஜனாதிபதி நிதியத்துக்கு வழங்கிய பங்களிப்புத் தொகை சுமார் 235 கோடியாகும்.

அவ்வாறான பங்களிப்பினை வழங்குவதற்கு அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சக்தியாக அமைந்த 'சனிக்கிழமை அதிர்ஷ்டம்', 'அபிவிருத்தி அதிர்ஷ்டம்', 'லக்கின அதிர்ஷ்டம்', 'ஜயோதா', 'கோடிபதி கப்ருக', 'சுப்பர் போல்', 'அத கோடிபதி' மற்றும் உடனடி லொத்தர் சீட்டுக்கள் என்பன அபிவிருத்தி லொத்தர் சபைக் குடும்பத்தின் லொத்தர் சீட்டுக்களினாலாகும்.

அவ்வாறான இணையற்ற பணியில் ஈடுபட்டு அதிர்ஷ்டத்தின் வைகறையை சுமந்து நாடு பூராகவும் செல்லும் அபிவிருத்தி லொத்தர் சபை அதன் அதிர்ஷ்டத்தினை பெறுகின்றவர்கள் அதனை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் மாத்திரமன்றி அனைவரும் அடைந்து கொள்கின்றார்கள். அபிவிருத்தி லொத்தர் விற்பனை வலையமைப்புடன் கைகோர்த்து நிற்கும் விநியோகஸ்த விற்பனை முகவர்கள் 89 பேரும், 2500 க்கும் மேற்பட்ட விற்பனை முகவர்களுக்கும் மற்றும் அதன் கீழ் சேவையாற்றும் இருபதாயிரத்துக்கும் அதிகமான விற்பனை உதவியாளர்களுக்கும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த பிறப்பிடமாக அபிவிருத்தி லொத்தர் சபை திகழ்கின்றது.

37 வருடங்கள் பூராகவும் அபிவிருத்தி லொத்தர் சபை மீது ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் வைத்துள்ள நம்பிக்கை அவ்வாறே தொடர்ந்தும் பேணிச் செல்லப்படும் என 37 ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்ற அபிவிருத்தி லொத்தர் சபை தனது அறிவித்தலை விடுத்துள்ளது.

விளம்பர விபரணம்



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் பட்டிப் பொங்கல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (படங்கள்:- குப்பிழான் செய்தியாளர்)

# நிதியை விரைவில் விடுவியுங்கள்

## ஆளுநரிடம் ஒப்பந்தகாரர்கள் கோரிக்கை




(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஒப்பந்தகாரர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பாக "தேசிய நிர்மாண சங்க வடமாகாண கிளை அங்கத்தவர்கள்" வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸை ஆளுநர் செயலகத்தில் கடந்த 16 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் ஒப்பந்தகாரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததுடன் விடுவிக்கப்படாதுள்ள நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்குரிய கொடுப்பனவுகள் தொடர்பில் விரைவான ஓர் தீர்வினை பெறும்பொருட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன் அவற்றினை வழங்குவதற்குரிய அனைத்து சாத்தியமான வழிவகைகளை மேற்கொள்வதாக ஆளுநரால் பதிவளிக்கப்பட்டது. (இ)

## வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில்
# "ஐ" றோட் செயற்றிட்டத்தின் கீழ் 12 வீதிகளுக்கு விரைவில் காப்பெற்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவில் ஐ றோட் செயற்றிட்டத்தின் கீழ் 155.62 கிலோ மீற்றர் நீளமான 12 வீதிகள் காப்பெற் வீதிகளாக புனரமைப்பு செய்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பராமரிப்பிற்குட்பட்ட நீர்வேலி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு ஜே-269, நீர்வேலி மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு ஜே-270, அச்செழு கிராம உத்தியோகத்தர் பிரிவு, ஜே-279 ஆகியவற்றின் ஊடாகச் செல்வும் 3.86 கிலோ மீற்றர் நீளம்கொண்ட நீர்வேலி குறுக்கு வீதி - புன்னாலைக் கட்டுவன் வீதி, உரும்பிராய் கிழக்கு ஜே-266 கிராம உத்தியோகத்தர் பிரிவு, ஊரெழு ஜே-267 கிராம உத்தியோகத்தர் பிரிவு, நீர்வேலி தெற்கு ஜே -268 கிராம உத்தி யோகத்தர் பிரிவு, நீர்வேலி மேற்கு ஜே-270 கிராம உத்தி யோகத்தர் பிரிவுகளுக் கூடாகச் செல்லும் கலைவாணி சனசமூக நிலையம், கரந்தன் வீதி ஆகிய வற்றினூடான 4.34 கிலோ மீற்றர் நீளமான ஊரெழு-நீர் வேலி வீதி என்பனவும் காப்பெற் வீதியாக புனரமைப்பு செய்யப்பட வுள்ளன. மேலும் வலி.கிழக்கு பிரதேச சபையின் பராமரிப்பிற்கு ட்பட்ட கோணாவலை வீதி 2.47 கிலோமீற்றர், புத்தூர் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஜே-273, சிவன் வீதி 1.1 கிலோ மீற்றர்,கோப்பாய் மத்தி ஜே-261 கிராம உத்தியோகத்தர் பிரிவு, ஜே-265 உரும்பிராய் தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட 1.12 கி.மீற்றர் நீளமான ஐயன்காடு மயானவீதி, அச்செழு மேற்கு ஜே-287 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட 41 கிலோமீற்றர் நீளமான இராச வீதி தோப்பு வீதி, பத்தமேனி ஜே-281 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட 1.15 கிலோமீற்றர் நீளமான பாரதி வீதி, கோப்பாய் தெற்கு ஜே-260 கிராம உத்தியோகத்தர் பிரிவு, கோப்பாய் மத்தி (ஜே-261) கிராம உத்தியோகத்தர் பிரி வுக்குட்பட்ட 0.53 கி.மீற்றர் நீள மான இராச வீதி கண்ணன் ஒழு ங்கை, சிறுப்பிட்டி கிழக்கு,

ஜே-271 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட 96 கிலோ மீற்றர் நீளமான செல்லப் பிள்ளையார் வீதி , உரும்பிராய் தெற்கு 265 கிராம உத்தியோகத்தர் பிரிவு, உரும்பிராய் கிழக்கு ஜே-266 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்டஉரும்பிராய் கிழக்கு பலாலி வீதியிலிருந்து கரந்தன், நீர்வேலி சிவன் வீதி , செல்லப்பா வீதி 0.85 கிலோ மீற்றர் நீளம், புத்தூர் வடக்கு ஜே-274, ஆவரங்கால் மேற்கு ஜே-277 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட 1.65 கிலோ மீற்றர் நீளமான வீதி வான்கை வீதி, நீர்வேலி வடக்கு ஜே-269 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மோதிரகேணி வீதி மற்றும் அதனோடு இணைந்த நீர்வேலி வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு செல் லும் 1.55 கிலோமீற்றர் நீளமான வீதிகளும் விரைவில் காப்பெற் வீதிகளாக புனரமைப்பு செய்யப்பட வுள்ளன. (இ-10)

# 6000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்



(கொழும்பு)

6,000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய அரச சேவைகளின் பயிற்சிகளுக்காக இணைத்துக்கொண்ட பட்டதாரிகளுக்கே இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்நிலையில், பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான தகுதிகளை பரீட்சிப்பதற்காக 10 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச சேவைகளில் இணைத்துக்கொள்வதற்காக குறித்த பட்டதாரிகள் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் பயிற்சிகளில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

பட்டதாரிகளுக்கு பல்வேறு அரச நிறுவனங்களின் முகாமைத்துவம், தொழில்நுட்பப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாரச்சி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பொலிஸ் அதிகாரிகள் 8 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் 8 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் குறித்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தவகையில், ஐந்து எஸ்.எஸ்.பிகள், இரு எஸ்.பிகள், ஒரு ஏ.எஸ்.பி. ஆகிய 8 பொலிஸ் அதிகாரிகளுக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டது. பெற்றுள்ள சேவையின் தேவையைக் கருத்தில் கொண்டு இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# 6 வருடங்களின் பின் இலங்கையில் மாற்றமடையும் வீதி வரைபடம்

(கொழும்பு)

இலங்கையின் புதிய வீதி வரைபடம் எதிர்வரும் 29ஆம் திகதி வெளியிடப்படும் என நில அளவீட்டு-திணைக்களம் தெரிவித்தது.

6 வருடங்களின் பின்னர் புதிய வீதி வரைபடத்தை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நில அளவீட்டுத் திணைக்கள அளவீட்டாளர் சங்கக்கார தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலை தொடர்பில் தகவல் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்படும் புதிய வீதிகள் தொடர்பான தகவல்கள் இதில் உள்ளடக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள் தொடர்பிலான தகவல்களும் அதில் உள்ளடக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

விசேடமாக நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய வரைபடம் பயனுள்ளதாக அமையும் என திணைக்கள அளவீட்டாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கட்டுநாயக்கவில் 9 பேர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்குள் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் சென்ற 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் தேசிய மற்றும் வெளிநாட்டு பிரயாணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும்வகையில் செயற்பட்ட 9 சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இராஜகிரிய பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் அனைவரும் கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 31 - 68 வயதுக்கு இடைப்பட்ட ஆடிஅம்பலம, காலி, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, ஹதரலியத்த, வாரியபொல, சீதுவ மற்றும் வலஸ்முல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். (ஐ)

# பகிடிவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கத் தீர்மானம்- பந்துல



(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் பகிடிவதை காரணமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், உயர்கல்வி, தொழிலநுட்ப புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதன் அறிக்கை 3 மாத காலப் பகுதிக்குள் வழங்கப்பட இருப்பதாகவும், இதற்கான திட்டம் தற்போது வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற் முன்னாள் நீதியரசர் சலீம் மர்சுக், முன்னாள் உபவேந்தரான நாரத வர்ணசூரிய, பேராசிரியர் சங்கைக்குரிய மாகம்மன பஞ்ஞானந்த தேரர், கலாநிதி வணக்கத்திற்கு பெனட் சாந்த அடிகளார், கலாநிதி சந்திரா அம்புல்தெனிய மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசன்ன லால் டி அல்விஸ் ஆகியோர் அங்கத்தவர்களாகச் செயற்பட உள்ளனர். இதன் அமைப்பாளரும் செயலாளருமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் திருமதி ஜனிதா லியனகே செயற்படவுள்ளார்.

இதேவேளை கடந்த 5 வருட காலப்பகுதியில் பகிடிவதை காரணமாகப் பல்கலைக்கழக கல்வியைக் கைவிட்ட மாணவர்களுக்கு மீண்டும் பல்கலைக்கழக கல்விக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரம் பேர் பகிடிவதை காரணமாகப் பல்கலைக்கழக கல்வியைக் கைவிட்டுள்ளனர். இவர்கள் உளரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தல் களுக்குள்ளா னமை இதற்கான காரணமாகும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


அதற்கமைய நாட்டு மக்களுக்கு பொறுப்புக்கூறும் நிறுவனமாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவை மாற்றுவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிலந்த விஜேசிங்க தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வினைத்திறன் மிக்க வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆணைக்குழு தயாராகியுள்ளது. சரியான தரவுகளை தயாரித்து, மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.


காணி தொடர்பான சரியான புள்ளிவிபரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான தேவை உள்ளது. நாட்டில் அதிகளவான காணிகளின் உரித்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் உள்ளது. எனினும் கடந்த காலங்களில் அதற்கான அடிப்படை வசதிகள் கிடைக்காமையினால் அந்த நடவடிக்கை பாதிக்கப்பட்ட தாகவும் தலைவர் சட்டத்தரணி நிலந்த விஜேசிங்க மேலும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு - கிழக்கில் வாழும்

# மக்களைக் கிணற்றுத் தவளைகளாக எண்ணும் முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்க் கூட்டமைப்பும்



## அதாவுல்லா காட்டம்-பதவி என்றால் மார்க்கமே மாறுவார் ஹக்கீம்



(சாய்ந்தமருது)

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கிணற்றுத் தவளைகளாக எண்ணுகின்றனர்.

மக்களை அந்தக் கிணற்றை விட்டு வெளியேற விடாமல் தடுக்கின்றனர். இதில் அரச பதவி என்றால் ரவூப் ஹக்கீம் மார்க்கமே மாறுவார் என தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா காட்டமாகத் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் இன்று இந்தப் பிராந்தியத்தில் முற்றுமுழுதாக தேசிய காங்கிரஸுடன் இணைகிறார்கள். இதில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,பொதுமக்கள் என்று பெருவாரியாக நம்முடன் கைகோர்த்து நிற்கின்றனர். மக்கள் இப்போது விழிப்படைந்துவிட்டனர்.

2010ஆம் ஆண்டு சிறுபான்மை மக்களின் ஆதரவு இல்லாமல் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததை நாம் மறந்தோம். 2005ஆம் ஆண்டு வாக்களிக்க விடாமல் செய்துவிட்டு பின்கதவால் சென்று பதவிகளைப் பெற்ற தலைவர்கள் தற்போது இருக்கிறார்கள்.

அந்தத் தலைவர்கள் 2015 ஆம் ஆண்டு இங்கு வந்து மைத்திரிபால சிறிசேன எங்களுடைய தலைவர் என்றார்கள். அது மட்டும் நடந்தது விட்டது. அது சிறுபான்மை மக்களால் நடக்கவில்லை. வழக்கமாக சிங்கள மக்கள் அளிக்கின்ற வாக்குகள் குறைந்தமையால் நடந்தது.

அதுமட்டுமல்ல 2019ஆம் ஆண்டு சிங்கள மக்கள் மிகப் பெரும்பான்மையாக கோட்டாபய ராஜபக்ஷவையும் மகிந்த ராஜபக்ஷவையும் ஆதரித்து இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் 2015 ஆம் ஆண்டைப் போன்றே மகிந்த ராஜபக்ஷ தோற்று விடுவார் என்று ஒரு நிலைமையை உருவாக்கியவர்கள் இந்தத் தலைவர்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு- கிழக்கில் வாழும் மக்களை கிணற்றுத் தவளைகளாக எண்ணுகின்றனர். மக்களை அந்தக் கிணற்றை விட்டு வெளியேற விடாமல் தடுக்கின்றனர்.

இதுதவிர கல்முனை பிரதேச செயலக பிரச்சினையையும் சாய்ந்தமருது பிரதேச சபை பிரச்சினையையும் மகிந்த ராஜபக்ஷவும், பசில் ராஜபக்ஷவும் தீர்த்துக் கொடுப்பதற்கான தெளிவுகளை வழங்கிய பின்னரும் சமூகத்தைப் பற்றி யோசிக்காத இந்தத் தலைவர்கள் மக்களைக் குழப்பி அன்னத்துக்கு வாக்களிக்க வைத்தனர்.

கடைசியிலே அந்த வாக்குகளை செல்லுபடியற்ற வாக்குகளாக மாற்றிவிட்டனர். சஜித் பிரேமதாஸவை காட்டி வாக்குக் கேட்டனர்.

ஆனால் அவர் தேர்தலில் தோற்ற பின்னர் அஞ்ஞாதவாசம் சென்றுவிட்டார். இப்போது மக்கள் எந்தவொரு இனப் பிரச்சினையும் இன்றி நிம்மதியாக வாழ்கின்றனர்.

நிம்மதியாக வாழ்வது பற்றி யோசிக்காத முஸ்லிம் தலை வர்களும் மீண்டும் சஜித்தை பிரதமராக்கி தீருவோம் என்றால் இது உண்மையாக மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமா?

தீர்த்தக் கரைகளில் கூட்டங்கள் வைப்பதுபோல இன்று ஒவ்வொரு ஊர்களிலும் வந்து சஜித் பிரேமதாஸவை பிரதமராக்கப் போகின்றோம் என்று கூறுகிறார்கள்.

இதை இந்தப் பிரதேசத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடியவர் ஒருவர் இருந்தார் என்றால் அவர் இந்தப் பிரதேசத்தில் வாழத் தகுதியற்றவர் என்று நாம் கருதலாம்.

இந்த வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் வாழும் மக்களை இவர்கள் மந்தைகளாக பார்க்கின்ற பார்வை எனக்கு வேதனை அளிக்கிறது. இவ்வாறாக மக்களிடம் பொய்களைச் சொல்லி வாக்குகளைக் பெறுகிறார்கள் என்றால் அவ்வாறான தலைவர்களை நாம் ஏன் நிராகரிக்க கூடாது.

சில கூஜா தூக்கிகள் சஜித் பிரேமதாஸ மூலம் தாங்களும் அரசாங்கத்திற்குள் வரலாமென்று கனவு காண்கின்றனர். தற்போது நாட்டில் முஸ்லிம் தலைவர்கள் எவரையும் காண முடியாதுள்ளது. இதில் அரச பதவி என்றால் ரவூப் ஹக்கீம் மார்க்கமே மாறுவார்.

எம்மத்தியிலுள்ள சில புல்லுருவிகள் மக்களை திசை மாற்றுவதற்கு வந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாவகச்சேரியில் உழவர் திருவிழா





(கொடிகாமம்)

தமிழர் மரபுவழி உழவர் திருவிழாவும் பட்டிப் பொங்கலும் சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன்,வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சங்கத்தானை முருகன் ஆலய முன்றலிலிருந்து மாட்டுவண்டி மற்றும் இசை வாத்தியங்களுடன் நடைபவனி ஆரம்பமாகி சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையத்தை சென்றடைந்தது. அங்கு உழவர் திருவிழா நடைபெற்றது. (இ-114)

# மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலை மீள் உருவாக்கம்; யாழ்.மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாட வேண்டும்

## சாவகச்சேரி பிரதேச சபையில் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலையின் மீள் உருவாக்கம் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாட வேண்டும் என சாவ்கச்சேரி நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை கோரிக்கை விடுத்தார்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மலக்கழிவுகளை உரமாக்குவது தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட திட்டம் தோல்வியடைந்துள்ளது. கைவிடப்பட்ட குறித்த திட்டத்தை மீளச் செயற்படுத்துவது தொடர்பாக அரசாங்க அதிபருடன் கலந்துரையாட வேண்டும்.

மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலையை மீள உருவாக்குவதற்கான தீர்மானத்தை சபையில் நிறைவேற்றி அதனை அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இது தொடர்பாக அரசாங்க அதிபருக்கு தொடர் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அத்துடன் சாவகச்சேரி நகர சபையில் தீயணைப்பு பிரிவு உருவாக்கம் தொடர்பான சபை முன்மொழிவினையும் உரிய அமைச்சிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சாவகச்சேரி நகர சபையில் தீயணைப்புப் பிரிவு உருவாக்கம் தொடர்பான சிந்தனை நல்லதோர் விடயம். இருப்பினும் தீயணைப்புப் பிரிவை பராமரிப்பது மிகவும் கடினம்.

தீயணைப்புப் பிரிவிற்கான ஆளணி மற்றும் வாகன வசதிகள் வேண்டும். அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் மாத்திரமே குறித்த ஆளணி மற்றும் வாகனங்கள் செயற்படக்கூடியதாக இருக்கும்.

ஆனாலும் தீயணைப்புப் பிரிவு இருந்தால் அனர்த்தங்களை உடனடியாக கட்டுக்குள் கொண்டுவர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-30)

# இரு குழுக்கள் மோதல்; 34 பேர் கைது




(கண்டி)

செல்லக்கதிர்காமம் பகுதியில் இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 34 பேர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் மேலும் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் கைது செய்யப்பட்டுள்ள 34 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஹங்வெல்ல பகுதியிலிருந்து செல்லக் கதிர்காமத்திற்கு வழிபாடுகளுக்கு சென்ற குழு வொன்றுக்கும் செல்லக்கதிர்காமப் பகுதியிலுள்ள குழுவொன்றுக்கும் இடையிலேயே இவ்வாறு மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ)

# வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஆரம்பம்



(கொழும்பு)

வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் வைத்திய சங்கம், லொத்தர் சபை, லயன்ஸ் கிளப் மற்றும் போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் இணைந்து விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர். இதன் ஆரம்பகட்ட நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வைத்திய சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

இதன்போது சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, வைத்தியர் இந்திக்க கருணாரத்ன, பேராசிரியர் சமன் தர்மரத்ன, விசேட வைத்திய நிபுணர் சஞ்சீவ குருசிங்க மற்றும் கார்ப்பந்தய வீரர் திலந்த மாரகமுவ எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்ததாவது.


பொது வாகனங்கள் போட்டி போட்டு செல்கின்றமையினால் பொதுவாகனங்களினால் ஏற்படும் விபத்துகள் அதிகமாகியுள்ளன. தெற்காசிய நாடுகளிலே எமது நாட்டில் தான் பொது வாகனங்கள் போட்டிபோட்டு செல்கின்றன. இந்நிலையில் வாகன விபத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்றால் அது தனிப்பட்ட நபரொருவராலோ அல்லது குறிப்பிட்ட சிலராலோ முடியாது. அனைவரும் அது தொடர்பில் சிந்திக்க வேண்டும். இந்நாட்டை பொறுத்தமட்டில் மோட்டார் சைக்கிள் விபத்துகளே பெருமளவில் இடம்பெற்றுள்ளன. விபத்துக்கள் எந்த வடிவில் வரும் என்பதை எம்மால் அறிய முடியாது. அதனால் எப்போதுமே நாம் அவதானமாக செயற்பட வேண்டும். இலங்கையில் நாளொன்றில் 2 மணித்தியாலம் 49 நிமிடத்துக்குள் ஒருவர் வாகன விபத்தில் உயிரிழக்கிறார்.

இந்த விபத்துகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக அரசாங்கத்திலிருந்து 30 இலட்சம் ரூபா வரை பணம் செலவிடப்படுகின்றது. இதனால் எமது பொருளாதாரத்துக்கே பெரிதும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மதுபானம் அருந்தி போதைப் பொருட்களை பயன்படுத்திவிட்டு வாகனங்களை செலுத்துபவர்களாலே விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன. கடந்த வருடம் மாத்திரம் மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

மேலும், கடந்த வருடம் மாத்திரம் வாகன விபத்துகளால் 30 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளனர் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# பாதுகாப்புப்படையினர்-போராட்டக்காரர்கள் மோதல்



## 400 பேர் படுகாயம்

(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையிலான மோதலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சுமார் 400 பேர் படுகாயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பமாகிய போராட்டங்களில் இது மிகப்பெரிய எண்ணிக்கையாகும். அத்தோடு 377 பேர் குறைந்தபட்சம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அந்தவகையில் பெய்ரூட்டில் காயமடைந்த 80 பேர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் மேலும் 140 பேர் அந்த இடத்தில் சிகிச்சை பெற்றனர் என்றும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் பல மணிநேரம் இடம்பெற்ற மோதல்களுக்குப் பின்னர், ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றதாகவும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான அழுத்தத்தை கொடுத்து ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் இந்த போராட்டம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1951

Search for people, places and things

**ராம்கி**

யாரை எங்கே நிறுத்த வேண்டும் என்பதை விட



நாம் எங்கே நிற்க வேண்டும் என்று உணர்ந்து கொள்வதே சிறப்பு


**புஸ்பா**

ஒரு பெண்ணின் சூழ்நிலைகளை புரிந்து நேசிக்கும் ஒரு ஆண் இறைவனுக்கு சமம்!



**சுலோக்சனா**

பணிவு என்பது பலவீனம் அல்ல...



அதுதான் 'பலம்'

**சஜீவன்**

நான் சிரிக்கும் நேரங்களில்...




என்னை அதிகம் ரசிப்பது நீ மட்டுமேதான் என்பதே உண்மை அம்மா...

**வித்யாபாலன்**

வாழ்க்கை என்பது பனைமரம் போன்றது ஏறினால் நொங்கு... சறுக்கினால் சங்கு...



**ரமேஷ் ராஜா**




இந்த கோடு நேராகும் போது... எல்லோரும் உன்னை நேசிப்பார்கள்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நல்லிணக்கத்தை சிதைக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி-பிரதமர் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நஸீர் வலியுறுத்து



(ஏறாவூர்)

முஸ்லிம் மக்கள் மீதான விரோத போக்கை மேன்மேலும் வலுப்படுத்தும் வகையில் இனவாத எண்ணம் கொண்ட பௌத்த பிக்குகள், தொடர்ந்தும் தமது கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர். இது இன நல்லிணக்கத்துக்குப் பெரும் தீங்கை ஏற்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாளாந்தம் முஸ்லிம் மக்களையும் அவர் தம் தலைமைகளையும் மையப்படுத்தி பரப்புரைகளை மேற்கொள்வது சில பௌத்த துறவிகளுக்கு முழுநேரப் பணியாக இருக்கின்றது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் "இலங்கையில் சிங்களவர்களைப் பாதுகாக்க மூன்றாவது சக்தியொன்றின் தேவை ஏற்பட்டுள்ளது எனவும் சிங்களவர்களின் பிரச்சினைகள் பற்றிக் கதைத்தாலே தவறாகச் சித்திரிக்கிறார்கள் எனவும் புதிதாக ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கமும் சிங்களவர்களின் உரிமைக்காகப் பெரிதாக அக்கறை எடுப்பதுமில்லை" எனவும் அவர்களால் பரப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன.

இவை சிறுபான்மையினர் மத்தியில் பெரும் சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றன. முழுமையான ஆட்சிபலத்துடன் எதற்கும் அஞ்சாத இறையாண்மையோடும் பெரும்பான்மை மக்களும் அவர்களது அரசும் இந்த நாட்டில் ஆட்சி நடத்தி வருகின்ற நிலையில் இன்னமும் சிங்களவர்களின் உரிமைகள் சிங்களவர்களின் உரிமை என இவர்கள் எதனைக் கேட்கிறார்கள் என்பது புரியவில்லை.

இந்த நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசுகளும் பெரும்பான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவற்றின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்தமையே வரலாறாக இருக்கின்றன. அதையே தற்போதைய அரசும் செய்து வருகின்றது.

இத்தகைய நிலையில் இன்னமும் சிங்கள மக்களின் உரிமைகள் குறித்து அக்கறை எடுப்பதில்லை என எதனை அவர்கள் கேட்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இவர்களது கூற்றுகளின்படி சிங்கள மக்களின் பாதுகாப்பு சிறுபான்மை மக்களால் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது என்ற தோற்றப்பாடே முன்னிலைப்படுத்தப்படுகின்றது. உண்மைக்குப் புறம்பாக இவ்வாறு முன்னெடுக்கப்படும் பரப்புரைகள் ஒரு திட்டமிடப்பட்ட அடக்குமுறையைச் சிறுபான்மை மக்களின் மத்தியில் திணிக்கும் நோக்கம் கொண்டவையாக இருப்பனவாகவே நாம் பார்க்க வேண்டியுள்ளது.

தனித்து பெரும்பான்மை மக்களால் நாம் ஜனாதிபதியைத் தேர்ந்து எடுத்துவிட்டோம். எவர் தயவும் இன்றி ஆட்சி அமைக்கப்பட்டு விட்டது. இனி எமக்கு அமைப்புகள் தேவையில்லை. அவற்றைக் கலைத்து விட்டோம்' எனக் கூறியவர்கள் இப்போது அந்த அரசின் மீதே குற்றம் கூறுவது எதனைக் காட்டுகிறது என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

தத்தமது இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்காக இவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய பரப்புரைகளை இனியும் சிங்கள மக்கள் கருத்தில் கொள்ளக் கூடாது. இதனைத் தடுத்து நிறுத்த ஜனாதிபதியும் பிரதமரும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒன்லைன் ஊடாக ரயில் பயணச்சீட்டு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் ரயில் பயணச்சீட்டை ஒன்லைன் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன் ஊடாக வெளிநாட்டில் உள்ளவர்களும் ரயில் பயணச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

அனைத்து ரயில்வே நிலையங்களுக்கு அருகிலும் பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்காக ரயில் - பஸ் கூட்டு சேவை வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதுடன், அனைத்து ரயில் நிலையங்களுக்கு அருகிலும் சுமார் 100 வாகனங்கள் தரித்து நிற்கக் கூடிய வசதிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இவ் வருட இறுதிக்கு முன்னர் புதிதாக 9 ரயில் எஞ்சின்கள் கிடைக்கவுள்ளன.

இவை மலையக ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில், பழைமை வாய்ந்த முறைக்கு அமைவாக, ரயில் ஒன்று தற்போது இரத்மலானை ரயில்வே தொழிற்சாலையில் செப்பனிடப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 3 மாத காலப்பகுதிக்குள் கொழும்பில் இருந்து பண்டாரவளை வரையில் இந்த ரயில் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுமென்றும் சுட்டிக்காட்டினார்.

ரயில் திணைக்களம் ரயில்களின் தேவைக்கு ஏற்றவகையில் திட்டங்களை வகுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய 10 பேர் கைது

(கொழும்பு)

மணம்பிடிய பகுதியில் உள்ள தொல்பொருட்கள் காணப்படும் பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய10 சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு ஆட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் இரண்டும் கைப்பற்றப்பட்டன. மேலும் ஒரு தொகை தேசிக்காய், கடல் மணல் ஆகியனவும் இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதையல் அகழ்வு பணிகளுக்காக மேற்படி தொல்பொருட்கள் நிறைந்த பகுதிகளுக்கு இவர்கள் வந்திருக்கலாம் என்றும் கைது செய்யப்பட்டவர்கள் 40 , 70 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், குருநாகல், நாரம்மல, வெலிகந்த, தெய்யத்த கண்டிய மற்றும் சுலஸ்திபுர பகுதிகளில் வசித்து வருபவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நாடாளுமன்றத் தேர்தலில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்

## மனோகணேசன் நம்பிக்கை



(பொரளை)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய தலைவர் எம்மிடம் உள்ளார். எனவே நாம் நிச்சயம் வெற்றியடைவோம் என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

பொரளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. எமக்கு பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

நாம் பெருமையடைகின்றோம். எம்மிடம் வெற்றி பெறக்கூடிய ஒரு தலைவர் இருக்கிறார். இவரைக் கொண்டு நிச்சயமாக நாம் இந்தத் தேர்தலில் வெற்றியடைவோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பலமான கூட்டணியொன்றை அமைத்து, அடுத்த பொதுத் தேர்தலில் களமிறங்கத் தீர்மானித்துள்ளோம்.


இந்தப் பொதுத் தேர்தலில் பலமான ஜனநாயகக் கூட்டணியொன்று உருவாகும். இந்தக் கூட்டணியின் தலைவராக நிச்சயமாக சஜித் பிரேமதாஸதான் செயற்படுவார்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 120 | 130 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 115 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 280 | 300 | 400 |
| தக்காளி | 350 | 200 | 360 | 140 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 | 100 | 100 |
| கோவா | 120 | 180 | 180 | 120 | 200 |
| கரட் | 350 | 500 | 400 | 300 | 500 |
| பூசணி | 80 | 80 | 60 | 50 | 100 |
| புடோல் | 160 | 100 | 120 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 300 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 350 | 280 | 500 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 150 | 180 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 180 | 160 | 120 | 90 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 240 | 170 | 200 | 180 | 200 |
| லீக்ஸ் | 300 | 300 | 360 | 350 | 400 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 250 | 200 |
| கறிமிளகாய் | 300 | 340 | 240 | 220 | 240 |
| முருங்கைக்காய் | — | 1600 | 1000 | — | 800 |
| போஞ்சி | 180 | 200 | 240 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 100 | 60 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 30 | 35 | 60 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 160 | 150 | 180 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 260 | 250 | 250 |
| முள்ளங்கி | 60 | 120 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 60 | 110 | 80 |




# எதிர்பாராத விடயங்களை எதிர்கொள்



ஒரு காட்டுக்குள் இரண்டு அணில்கள் நண்பர்களாக வாழ்ந்து வந்துச்சாம். ஒன்னு பேரு புத்தி. இன்னொன்னு பேரு மத்தி. புத்தி எப்போதும் கடவுள் பக்தியோட இருப்பானாம். மத்தி அதுக்கு அப்படியே எதிர்மறையான எண்ணம் உள்ளவன். அதாங்க கடவுள் நம்பிக்கை இல்லாதவன். எப்போதும் புத்தி கடவுளுக்கு நன்றி சொல்லிகிட்டே இருப்பான். ஏதாவது நன்மை நடந்தாலும் தீமை நடந்தாலும் எல்லாம் நன்மைக்கேன்னு கடவுளுக்கு நன்றி சொல்வானாம். ஏதோ ஒரு நன்மை நமக்கு இருக்குன்னு சொல்லிட்டு தனக்கு தானே சமாதானம் செய்துகொண்டு போய்விடுவானாம். நம்மையும் மீறி ஏதோன்னு நடக்குதுன்னு புத்தி எப்போதும் நம்புவான். அதைப் பார்த்து மத்தி கேலி பண்ணி ஏளனமாய் சிரிப்பானாம்.

உன்னை மீறி வாழ்க்கையில என்னடா நடக்கப் போவுது. நீ என்ன நினைக்கிறியோ அது தான் வாழ்க்கையிலும் நடக்கும்ன்னு மத்தி சொல்லிக்கிட்டே இருப்பானாம். ஒரு நாள் ரெண்டு பேரும் ஒரு அழகான காட்டுக்குள் பழங்களை பறித்துச் சாப்பிடப் போனார்களாம்.

இங்கேயும் அங்கேயும் ஓடியாடி அந்த மரத்துல விளையாடி கொண்டிருந்தார்களாம். எதிர்பாராத விதமா புத்தி கீழே விழுந்துவிட்டான். முதுகில் பலத்த அடி. சின்னதா ஒரு காயமும் கூட. வலி தாங்காம முதுகுல தேய்ச்சுகிட்டு. ஏதோ ஒரு நல்லதுக்கு தான் நாம கீழே விழுந்துட்டோம். நல்லவேளை நமக்கு பெருசா எதுவும் அடி படலை... எல்லாம் நமைக்கேன்னு சொல்லிட்டு அடிபட்ட இடத்துல தேய்த்து கொண்டிருந்தான்.-

நன்றி கடவுளே தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சுன்னு சொல்லிட்டு மேல பார்த்தானாம்... புத்தி விழுந்ததை பார்த்து மத்தி கெக்கே... கெக்கேன்னு சிரித்துக்கொண்டு ஏளனமாய் கேலி செய்தானாம். நீ ஒழுங்கா மரத்தை பிடிக்காம கவனக்குறைவா விழுந்ததுக்கு ஏன்டா கடவுளுக்கு நன்றி சொல்றேன்னு கேலி செய்தானாம்... டேய் மத்தி நான் கீழே விழுந்தவுடன் செத்து போய் இருக்கலாம். ஆனா சின்னதா அடிபட்டத்தோட தப்பிச்சுகிட்டேன்.

இதிலிருந்து நம்மள சுத்தி எது நடக்குதோ எல்லாம் நன்மைக்கே. நம்மளையும் மீறி ஏதோ நம்மளை இயக்குதுன்னு நான் முழுமையா நம்புறேன்.... இதைவிட சிறந்த உதாரணம் நான் உனக்கு காட்டமுடியாதுன்னு சொல்லிட்டு மத்தியை மேலே நிமிந்து பார்க்குது..... அவ்வளவுதான். ஒரு விநாடி தலையே சுத்திருச்சு... மத்தி அணிலோட பக்கத்துல பெரிய பாம்பு வாயை ஆன்னு பிடிக்க ஆயத்தமா இருக்கு... டேய் மத்தி மத்தி கீழே வாடான்னு கத்துறதுக்குள்ள லபக்குன்னு அந்த பாம்பு மத்தியை முழுங்கிடுச்சு... ஒரு நிமிடத்துக்குள்ள எல்லாம் மாயமாய் நடந்து முடிந்தது.

அதைப்பார்த்த புத்திக்கு கால் எல்லாம் வெட வெடன்னு ஆட ஆரம்பிச்சுடுது... என் நண்பன் என் கண் முன்னாடி இப்படி போய்ட்டானேன்னு பயங்கரமா அழ ஆரம்பிச்சது புத்தி.... இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றிய கடவுளுக்கு நன்றி சொன்னான். நம்மைச் சுற்றி நடக்குற எல்லா இன்ப துன்பங்களுக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கும்.

எல்லாம் நமைக்கே சொல்லிட்டு மத்தியை நினைத்து சோகத்துடன் காட்டுக்குள் சென்று விட்டது. இதுபோல தான் நம்ம வாழ்க்கையும் திட்டமிடல் எப்போதும் இருக்கணும். அதே போல ரொம்ப கவனமாகவும் இருக்கணும். அதையும் மீறி ஏதோ ஒன்னு நம்மளை இயக்குது.

எப்போவும் முன்னெச்செரிக்கையா இருக்கணும்... எதிர்பாராத விடயங்களை கண்டிப்பா நாம எதிர்கொண்டுதான் ஆகணும். இப்படி நடந்து போச்சேன்னு உட்கார்ந்து வருத்தப்படுவதை விட தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சுன்னு எல்லாம் நன்மைக்கென்னு நம்பிக்கையோட நகர்தல் நலம்.

எதிர்பாரத விடயங்களை எதிர்கொண்டு வாழ்ந்துதான் பார்ப்போமே... வளையும் தன்மையுள்ள ஒரு மரம் புயலில் சிக்கினாலும் அதற்கு ஒன்றும் ஆகாது. அதேபோல், உங்களை மீறி சில மாற்றங்கள் நடக்கும் போது உங்களாலும் அதற்கு "வளைந்து" கொடுக்க கற்றுக்கொள்ள முடியும்.

எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்கள் எப்போதுமே கெட்டதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. நாம் நினைக்கும் விதத்தில்தான் நம் வாழ்க்கை இருக்க வேண்டும் என்று நாம் எல்லோரும் ஆசைப்படுவோம். ஆனால், அப்படி நடக்கவே நடக்காது.

"மன உறுதியோடு இருக்கிறது நம்ம கையிலதான் இருக்கு. இப்போது இருக்குற சூழ்நிலைமையில என்ன நல்ல விடயங்கள் இருக்குதுனு பாருங்க"

## உருவில் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## பழமொழிகள்

- சுவாமி வரம் கொடுத்தாலும் பூசாரி இடம்கொடுக்க மாட்டான்.
- சூடு கண்ட பூனை அடுப்பங் கரை நாடாது
- செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்.
- செத்தவன் உடைமை இருந்தவனுக்கு அடைக்கலம்.
- செய்வன திருந்தச் செய்.
- செருப்பின் அருமை வெயிலில் தெரியும். நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.
- சென்ற இடம் எல்லாம் சிறப்பே கல்வி.
- சேராத இடத்திலே சேர்ந்தால் துன்பம் வரும்.
- சேற்றிலே புதைந்த யானையைக் காக்கையும் கொத்தும்.
- சேற்றிலே செந்தாமரை போல.
- சொல்லிக் கொடுத்த புத்தியும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளுக்குக் கூட வரும்?

## கீழே இருக்கும் ஒவ்வொருவரினதும் நிழலை சரியாக இனங்காணுங்கள்



## வீட்டிற்குச் செல்ல வழிசொல்லுங்கள்



நல்லவர்களைத் தேர்ந்தெடுத்துப் பழகுங்கள்.
வாழ்வில் முன்னேறுவதற்கு இதுதான் சிறந்த வழி.
- வாரியார் சுவாமிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜனாதிபதியைச் சந்தித்தது ஏன்?

இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் நேற்று முன்தினம் இலங்கைக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார்.

அவரின் சந்திப்புக்கள் குறித்த விபரங்கள் வெளியாகவில்லையாயினும் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட செய்தியை அவர் ஜனாதிபதியிடம் கையளித்திருப்பார் எனத் தென்பகுதி ஊடகங்கள் ஆரூடம் வெளியிட்டுள்ளன.

இங்கு இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் திடீர் விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தமைக்குள் முக்கியமான விடயங்கள் இருக்குமென்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

அதாவது இந்தியப் பிரதமர் .மோடியின் விசேட செய்தியை அவர் கொண்டு வந்தாரோ இல்லையோ, ஆனால் ஒரு முக்கியமான விடயத்தை அவர் நிச்சயம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கூறியிருப்பார் என்பது சர்வ நிச்சயம்.

ஆக, இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அதிரடியாக இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியைச் சந்தித்தமைக்குக் காரணம் என்ன என்பது பற்றி ஊடகங்கள் பல்வேறான ஊகங்களை வெளிப்படுத்தப் போகின்றன.

அவை எவ்வாறான ஊகங்களாக இருக்கும் என்பதை அடுத்து வரும் சில நாட்களில் நாம் அறிந்து கொள்ள முடியும்.

ஊடகங்களின் கருத்துக்கள் எவ்வாறாக இருந்தாலும் நம்மைப் பொறுத்தவரை இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் இலங்கை ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு பின்வரும் விடயம் காரணமாக இருந்திருக்கலாம் என அனுமானிக்க முடியும்.

அதாவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு இந்தியாவின் அழைப்பை ஏற்று அங்கு சென்று, பிரதமர் மோடியைச் சந்தித்த கோட்டாபய ராஜபக்ஷ சந்திப்பை முடித்த பின்னர் இந்துப் பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியில்,

13ஆவது திருத்த சட்டமூலத்தை அப்படியே அமுல்படுத்த முடியாதெனக் கூறியிருந்தார். இது பிரதமர் நரேந்திர மோடிக்கு நிச்சயம் கடுப்பை ஏற்படுத்தியிருக்கும்.

தவிர, நாடு திரும்பிய ஜனாதிபதி கோட்டாபய, 13ஆவது திருத்த சட்டமூலத்தை அடியோடு நிராகரிக்க வேண்டும் எனவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாதெனவும் கூறியிருந்தார்.

அவரின் இந்தக் கருத்துக்கள் இந்தியாவுக்குச் சவால் விடுவதுபோல இருந்தது.

சரிவரவில்லை என்று இந்திய மத்திய அரசு பொறுத்துக் கொண்டாலும் இந்தியாவை அலட்சியப்படுத்துகின்ற கருத்துக்களை இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்து முன்வைத்தனர்.

அதில் முக்கியமானது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறிய; இந்தியா இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரமுடியாது என்ற கருத்தாகும்.

ஆம், கடந்த 14ஆம் திகதி தமிழ் ஊடகத்துறை சார்ந்தவர்களை அலரிமாளிகையில் சந்தித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ; இனப்பிரச்சினைக்கான தீர்வை இந்தியாவால் தந்துவிட முடியாது எனக் கூறியிருந்தார்.

இவ்வாறு அவர் கூறியது 13ஆவது திருத்த சட்டமூலத்தை நிராகரிப்பதை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

அதாவது இலங்கையில் உள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதை இலங்கை அரசும் சிங்கள பெரும்பான்மை இன மக்களும் தீர்மானிக்க முடியுமேயன்றி,

இதுவிடயத்தில் இந்தியா தலையிட முடியாது. தலையிடவும் விட மாட்டோம் என்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கருத்து அமைந்திருந்தது.

ஈழத் தமிழர்களுக்கான தீர்வை இந்தியா பெற்றுத்தர வேண்டுமென வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்அண்மையில் இந்தியாவில் ஆற்றிய உரைக்குப் பதில் அளிப்பதாக இந்தியா பிரச்சினைக்குத் தீர்வு தர முடியாது எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறிய கருத்து,

பிரதமர் மோடியின் கவனத்தை ஈர்க்க, இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் இலங்கைக்கு அவசரமாக வருகை தந்து ஜனாதிபதி கோட்டாவைச் சந்தித்தார்.

## யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள (MRi) ஸ்கானர் செயற்பட ஆரம்பித்துவிட்டது

### பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய (MRi) ஸ்கானர் கடந்த வாரம் செயற்பட ஆரம்பித்துவிட்டதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

வடமாகாண அரச வைத்தியசாலைகளில் மிக நீண்ட காலமாக நிலவி வந்த (MRi) ஸ்கானரின் தேவை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.

அதி நவீன செயற்திறன் கொண்ட இவ் ஸ்கானர் இயந்திரம் தற்போது பரீட்சார்த்தப் பாவனை மூலம் பொது மக்களுக்குச் சேவை வழங்கி வருவதால் நோயாளர்கள் கொழும்புக்குச் செல்லும் தேவை ஏற்படாது.

ஆகவே வெகு விரைவில். குறித்த இயந்திரத்தை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-10)

## வைத்தியரின் காரை சேதப்படுத்திய விசமிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வைத்தியர் ஒருவரின் காரை அடையாளம் தெரியாத சிலர் அடித்து நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றிற்கு அருகாமையில் அமைந்துள்ள வைத்தியரின் தங்கும் விடுதிக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த காரே நேற்று முன்தினம் இவ்வாறு அடித்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எவரும் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா)

## வடக்கு கிழக்கில் சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிடும் -திலங்க

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனித்து போட்டியிடுவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அக்கட்சியின் பிரதி தவிசாளரான இராஜாங்க அமைச்சரான திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கூட்டணி அமைக்கும் போது பொதுவான சின்னத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

ஆனாலும் கூட்டணியில் சேர்கின்ற எந்தவொரு கட்சியினதும் சின்னத்தில் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட முடியும்.

ஆனாலும் ஒரு சிலர் சின்னத்தை காரணம் காட்டி கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்த முனைகின்றனர்.

இதேவேளை கடந்த 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுனவை விட எமது கட்சியே அதிகளவு வாக்குகளை பெற்றிருந்தது.

எனவே பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கில் மாத்திரம் வேறு சின்னத்திலும் ஏனைய பகுதிகளில் பொதுஜன முன்னணியின் மொட்டுச் சின்னத்தில் களமிறங்க வாய்ப்புள்ளது" என குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3ஆம் குறுக்குத் தெரு ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் P.S.C, பகல அளுத்வத்த கிராமம், மதவு வைத்த குளம், தவசிக்குளம், லக்ஸபானா வீதி, பண்டாரிக்குளம், சாளம்பைக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** முருங்கனிலிருந்து உயிலங்குளம் வரை, முருங்கனிலிருந்து சிலாவத்துறை ஊடாக முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், செம்மண் தீவு நீர்ப்பாசன சபை I மற்றும் II, பரப்பன் கண்டல், மாதோட்டம், உயித்திரசங்குளம், Live break பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

பெரமுனவின் செயற்பாட்டால்

## சுதந்திரக்கட்சி மாற்று வழியை தேடவேண்டி ஏற்படும்

### லக்ஸ்மன் பியதாஸ எச்சரிக்கை

(கண்டி)

சுதந்திரக்கட்சியினரின் மனங்களை காயப்படுத்தினால் மாற்று வழியைத் தேட வேண்டி ஏற்படுமென பொதுஜன பெரமுனவுக்கு அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கூட்டத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது. "எமக்கு பதவிகள் முக்கியமல்ல. கட்சித் தலைவர்கள் ஏற்படுத்தி கொண்ட இணக்கப்பாடே முக்கியமாகும்.

மேலும் நாங்கள் எந்த சவாலையும் எதிர்கொள்வதற்கு எந்நேரமும் தயாராகவே இருக்கின்றோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் கூட்டணியாக செயற்படவே விரும்புகின்றோம். ஆனால் நாங்கள் புறக்கணிக்கப்பட்டால் மாற்று வழியைதான் தேட வேண்டி ஏற்படும்" என குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மிக விரைவில் பறந்து செல்லும் நேரத்தைப் பிடி. அது உன்னை விட்டுச் செல்லும் போதே அதைப் பயன்தரும் வகையில் உபயோகப்படுத்து. வாழ்க்கை மிகவும் குறுகிய வசந்தகாலம். மனிதன் அதில் மலர்ந்த மலர். எனவே நேரத்தை நன்றாகப் பயன்படுத்து!.**

**-ஜான்சன்**

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இல்லற மலர்ச்சி



உண்மையான நிலை என்னவென்றால், நாம் செய்த பாவம், புண்ணியம் இரண்டும் நம்மிடத்திலே உள்ளன. இந்த இரண்டையும் சரிப்படுத்துவதற்கு இறைநிலை பாரபட்சமில்லாத நீதிபதியாக அவ்வப்போது செயலிலே விளைவு தந்து கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால், நெருங்கிய உறவிலே, இணைந்த உறவிலே உள்ளவர்கள் மூலமாகத் தான் அதிகமான அளவு செயற்பட முடியும். விளைவு வர முடியும். அப்பொழுது இறைவனுடைய வரமாகட்டும், இறைவன் தரும் படிப்பினையாகட்டும், கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் அவர்கள் மூலமாகத் தான் அதிகமாக வெளிப்பாடு உண்டாகும்.

ஆகவே, இருவருமே ஒருவருக்கு ஒருவர் இறைவனே என்னுடைய மனைவியினுடைய வடிவத்திலே வந்து எனக்கு உறுதுணையாக இருக்கிறாள் என்று எண்ணவும், இறைவனே எனக்குக் கணவன் என்ற உறவிலே வந்து உறுதுணையாக அமைந்திருக்கிறான், என்னுடைய வினையின் பயனாக ஏதோ ஆங்காங்கு சில துன்பங்கள் வந்தாலும் அதை நாம் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற அளவிலே, இரண்டு பேருமே ஒருவரிடத்திலே ஒருவர், உண்மையான தெய்வநிலையைக் காணக் கூடிய அளவிலே, தெய்வப் பிரசன்னத்தை அறியும் அளவிலே மனதை உயர்த்திக் கொண்டீர்களேயானால் இல்லற வாழ்க்கையிலே இதுவரை நீங்கள் அனுபவித்திராத ஒரு மலர்ச்சி உண்டாகும்.

# ஏக ஆதிக்கம் செலுத்தி உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை உடுப்பிட்டி நவஜீவன்ஸ்விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சிவகுமரன் அணி மோதியது.

தொடர்ந்து ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியினர் 25:20, 25:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். (க)

# அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது பள்ளிமுனை சென்.லூசியா அணி



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் நானாட்டான் டைமன் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தனது 45 ஆவது ஆண்டினை முன்னிட்டு நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பள்ளிமுனை சென்.லூசியா அணியை எதிர்த்து சிறுகண்டல் சென்.அன்ரனீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 06:00 என்ற கோல் கணக்கில் சென்.லூசியா அணி வெற்றி பெற்றது. (க)

# அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் வெற்றி

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் நானாட்டான் டைமன் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தனது 45 ஆவது ஆண்டினை முன்னிட்டு நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து மாவிலங்கேணி புனித அலோசியஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் சென்.அன்ரனீஸ் அணி வெற்றி பெற்றது. (க)




அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# லீக் ஆட்டத்தில் வென்றது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்



குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 05:00 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக வர்மன், சிவரதன் ஆகியோர் தலா இரு கோல்களையும் ஈழவேந்தன் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (க)

# இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது துறையூர் ஐயனார் அணி



புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையமும் மற்றும் இறுப்பிட்டி விளையாட்டு கழகமும் இணைந்து நடத்தி வரும் உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04 : 01 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது ஐயனார் அணி.

ஐயனார் அணி சார்பாக அகீபன் 02, சுபிதன், ராஜ்குமார் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தனர். (க)

## வெளிநாட்டு...

பய ராஜபக்ஷ கூறிய கருத்துக்கு நாம் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

காணாமற் போனவர்கள் இல்லை என்று சொல்வது நாம் எதிர்பார்த்ததுதான். தமிழ் மக்களின் வாக்குகளுடன் வந்த அரசாங்கமும் அதனையே சொன்னது. சிங்கள மக்களின் ஆதரவுடன் வந்த அரசாங்கமும் அதனையே சொல்லியிருக்கிறது. வெளிநாடுகள் மூலமே தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை இவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர்களால் பொங்கு தமிழ் நிகழ்வு நடத்தப்பட்டிருந்தது. அந்த நிகழ்வை எதிர்வரும் காலத்தில் பெருமளவில் செய்வதாக கூறியிருக்கிறார்கள். அதனை விட நாம் தமிழ் மக்களுக்கான தீர்வை எப்படிப் பெறப் போகின்றோம். என்ன வழியில் பெறப் போகின்றோம் என்பதைத்தான் இந்த அரசியல் தலைமைகள் மற்றும் கல்விச் சமூகமும் கூற வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு இருக்கிறது.

எனவே நாம் அனைவரும் ஒருமித்த குரலுடன் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளை அழைப்பதன் ஊடாகத்தான் தமிழருக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று தெரிவித்துள்ளனர். (ஞா-250, 299)

## தொழிலை...

வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்க்கும் நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படவுள்ளது.

தொழில்வாய்ப்புகளை பெறுவோருக்கு தலைமைத்துவம் மற்றும் அரச சேவை பற்றிய முறையான பயிற்சியும் விளக்கமும் வழங்கப்படவுள்ளது. மக்களுக்கு பொறுப்புக் கூறும் அரச சேவையொன்றையும் அரச ஊழியர்களையும் உருவாக்குவதே தனது நோக்கமாகுமென்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

ஒரு சிறு பிரிவினரால் ஏற்படும் தவறுகளின் காரணமாக முழு அரச சேவையின் மீதும் குற்றம் சுமத்தப்படும் நிலை உருவாகியுள்ளது. அன்றாடம் இடம்பெறும் தவறுகள் முழு அரச சேவைக்கும் இழுக்கை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். மக்கள் வியர்வை சிந்தி சம்பாதிக்கும் பணத்தின் மூலமே அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. வினைத்திறனானதும் முறையானதுமான அரச சேவையின் மூலம் தமக்கு ஊதியம் வழங்கும் மக்களுக்கு நியாயமானதொரு சேவையை பெற்றுக் கொடுப்பது அரச ஊழியர்களின் பொறுப்பாகுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் அனைத்து பிள்ளைகளையும் நாட்டின் பொருளாதாரத்தின் பங்காளர்களாக மாற்றும் கல்வி முறைமையொன்று திட்டமிடப்பட்டு வருகின்றது. உலகின் ஏனைய நாடுகளின் தொழில்வாய்ப்புகளுக்கு பொருத்தமான வகையில் கல்வி முறைமையை தயாரிக்க வேண்டிய தேவையுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற் சந்தைகளுக்கு பொருத்தமான வகையில் புதிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட மூலோபாயத்தின் ஊடாகவே அதனை செய்ய வேண்டும்.

இளைஞர், யுவதிகள் தொழில் தேடிச் செல்வதற்கு பதிலாக தொழில் வாய்ப்புகள் இளைஞர், யுவதிகளை தேடிவரும் கல்வி முறைமையொன்றை விரைவாக ஏற்படுத்த வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஞா)

## விக்னேஸ்வரன்...

மும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி எமது கட்சியின் 50ஆவது ஆண்டு விழாவை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். அன்றைய தினம் கட்சியின் செயலாளர் நாயகத்தை தெரிவு செய்யும் முடிவையும் பாராளுமன்றத் தேர்தலுக்கான தமிழீழ விடுதலை இயக்கத்தின் வேட்பாளர்கள் யார் என்பதையும் நாம் தெரிவிக்கவுள்ளோம். எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை நாம் மீள அழைக்கப் போவதில்லை. அவர்களுக்கு எமது கட்சியில் இடமில்லை.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மாறினால் அதில் இணையத் தயார் என முன்னாள் முதலமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்து என்னைப் பொறுத்தவரை நல்ல விடயமாகப்படுகிறது. இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் பேசி அப்படி ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்கான முயற்சியை செய்யலாமே தவிர இது ஒரு சாத்தியமான விடயம் என என்னால் கூறமுடியாது.

எமது மக்களின் இனப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று வாயளவிலே சொல்லுகின்ற யாருமே எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகவே உளரீதியாக சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் இந்த விடயத்திலே ஒற்றுமை கொள்ளக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும். அவருடைய கூற்றினை நாம் சிந்திக்க வேண்டும். அவரை உள்வாங்கும் போது பலமான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழும். அந்த முயற்சியை ரெலோ செய்யும்" என அவர் தெரிவித்தார். (ம-250,299)

## தீர்வு கிடைக்கும்...

எத்தனை தடைகள் வந்தாலும் அதைத் தகர்த்தெறிந்து போராடுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொங்கல் விழா, திருகோணமலை நகராட்சி மன்ற நகர மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "எமது போராட்டத்தை தோற்கடிப்பதற்காக பலர் முயற்சி செய்தபோதும் அது இன்னும் பன்மடங்கு பலத்துடன் எமது மக்களின் ஆணையுடன் முன்னெடுக்கப்பட்டே வருகின்றது.

இந்த ஒற்றுமை எமது மக்களுக்கான நிரந்தரத் தீர்வு கிட்டும் வரை நிலைத்திருக்க வேண்டும். இலங்கை தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் மக்களின் ஜனநாயக முடிவைத்தான் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அதனடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்த குரலில் எவருக்கும் அடிபணியாது செயற்பட்டு வருவதனால் இன்று சர்வதேச சமூகமும் எம்மை அங்கீகரித்து எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும் என அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

எமது தீர்வு நோக்கிய பயணம் சிறப்பாகவே நகர்ந்து சென்றது. பெரும்பான்மையின மக்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்ப நிலையே இந்த ஆட்சி மாற்றத்திற்குக் காரணமாகும்.

இருப்பினும் நாம் எமக்கான தீர்வு கிட்டும் வரை உறுதியாக செயற்பட்டு வருகின்றோம். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கூறிய விடயங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஞா)

## இந்திய மீனவர்...

டுள்ளனர்.

இந்தியாவின் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த பாரதி, சசிகுமார், மணி, அசோக்குமார் ஆகிய நான்கு மீனவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் நெடுந்தீவுக் கடற்பரப்பினருகே நேற்று முன்தினம் இரவு தொழில் ஈடுபட்டிருந்த நிலையில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் நேற்று மாலை யாழ் பண்ணையிலுள்ள நீரியல் வளத் திணைக்களத்திற்கு கொண்டு செல்லப்பட்ட குறித்த நான்கு மீனவர்களும் அங்கு பதிவுகளை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகளை நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இலங்கை கடற்படையினர் தம்மைத் தாக்கி தமது படகையும் கடலுக்குள் மூழ்கடித்தே தம்மைக் கைது செய்துள்ளதாக இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## துப்பாக்கிச்சூட்...

பொலிஸாரின் ஆணையை மீறி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது, அவ்வீதியில் பயணித்த வான் ஒன்றில் இருந்த பௌத்த மதகுரு மீது தோட்டா பாய்ந்ததில் அவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹாதாகல புரான ரஜமகா விகாரையின் புத்தல-உனாவடுவே சீலரத்ன தேரர் (வயது - 21) என்பவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மதகுருவின் சடலம் அங்குனுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஞா)

## முதியவர்...

கடந்த 15ஆம் திகதி தோட்டத்துக்கு துவிச்சக்கரவண்டியில் செல்லும்போது அல்லாரை பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்து யாழ்.போதான வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 69 வயதுடைய முத்தையா இராசநாயகம் என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார்மேற்கொண்டார். (ஞா-78)

## அரச ஊழியர்...

நாடுமுழுவதும் தொழிலை எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த பட்டதாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"மக்கள் வியர்வை சிந்தி சம்பாதிக்கும் பணத்தின் மூலமே அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. வினைத்திறனானதும் முறையானதுமான அரச சேவையின் மூலம் தமக்கு ஊதியம் வழங்கும் மக்களுக்கு நியாயமானதொரு சேவையை பெற்றுக் கொடுப்பது அரச ஊழியர்களின் பொறுப்பாகும்" என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## ஜி.எஸ்.பி...

இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அமைச்சு கூறியுள்ளது.

2023 ஆம் ஆண்டு வரை வரிச்சலுகை வழங்கப்பட்டாலும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படாது என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதித் தலைவரும் அரசியல், வர்த்தகம் மற்றும் தொலைத்தொடர்பு பிரிவின் தலைவருமான த்ரோஸ்டன் பர்க்ஃபெட் கூறியுள்ளார்.

நாட்டின் ஆடைத் தொழிற்துறைக்கே, ஜி.எஸ்.பி வரிச்சலுகை அதிகமாக வழங்கப்படுகின்றது.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில், 43 வீதத்தை ஏற்றுமதி ஆடைத் தொழிற்றுறையே பூர்த்தி செய்வதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த சந்திப்பின்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆடைத்தொழிற்துறை ஏற்றுமதியூடாக வருடாந்தம் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் நாட்டிற்கு கிடைக்கின்றது.

இதற்காக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு அமைச்சர் இதன்போது நன்றி தெரிவித்துள்ளார். (ஞா)

நீரோகா லக்ல ஐய
திகதி 2020/01/19
சீட்டிழுப்பு இலக்கம் 0651
லக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 28 30 53 58

தன நிதானய
திகதி - 2020.01.19
சீட்டிழுப்பு இலக்கம் - 254
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 17 18 59 73
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466

மஹஜன சம்பத
திகதி 2020/01/19
சீட்டிழுப்பு இலக்கம் 4095
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 6 9 5 7 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி 19-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2366
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 35 63 67 73
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1112
சீட்டிழுப்பு திகதி 19.01.2020 ஞாயிற்றுக்கிழமை
B 54 67 72 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,585,524
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 857
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.01.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,150,565/-
வெற்றி இலக்கங்கள் 09 12 30 62
ஆங்கில எழுத்து W
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

ஜய
சீட்டிழுப்பு வாரம் 548
வர்ணம் மஞ்சள்
திகதி 19.01 2020 ஞாயிற்றுக்கிழமை
K 01 34 35 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,211,560
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 19/01/2020
வெற்றி வாரம் 2743
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் துலாம் 04 43 50 58
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2020/01/20 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919



# றொமானியா ஹொட்டேல் வேலைவாய்ப்பு

Cook Helper / Grill Worker / Salad Maker / Sandwich Maker / Waiter Helper / Bartender / Dish Washer / Cleaner

உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்!

சம்பளம் US $ 450 - 500
81,540 - 90,600/-

விசா - டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!

இதுவரை 35 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர்

நீங்களும் இந்த அரிய வாய்ப்பைப் பெற...

எமரல்ட் ஐல் License No. 2268
077 003 8215
077 554 6956
021 221 9221 (C-9008)

இல.221-1/1. மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்.
(இஷாரா புடவையகம். The Lovers / Tean Girls அருகே)
www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk

# அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே அரசியலமைப்பை திருத்த முயற்சி

## அஜித் மன்னப்பெரும குற்றச்சாட்டு

(கொழும்பு)

அண்ணனிடம் உள்ள அதிகாரங்களை தம்பி எடுத்துக் கொள்வதற்காகவே அரசியலமைப்பு திருத்தத்தை மாற்றியமைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் ராஜபக்ஷக்களின் குடும்ப பிரச்சினையை அவர்களே பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் 19 ஆவது திருத்தத்தை மாற்றி அமைக்க வேண்டிய தேவை நாட்டுக்கு இல்லை.

ஜனநாயக ஆட்சியை விரும்புகிறவர்கள் ஒரு போதும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்க மாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். (ஞா)

# விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550*/=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-8785)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

# சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=

கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8786)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

# றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (1888)

# சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை (1930)

076 239 9874

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# ஊடககற்கை

MEDIASTUDIES

ஆசிரியர்

என்.கஜிதரன்

B.A (Hons) Spl in Media Studies
M.A (Mass Comm..)

A/L Day Class

பாடம் மாறி கற்கும் மாணவர்கள் சாதனை படைக்கும் வகையில் விசேட வகுப்புக்கள்.

பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்
பொருளியற் கல்லூரி - சுன்னாகம்
BARATHY - சித்தன்கேணி

தரன் கல்லூரி - மானிப்பாய்

A/L 2020, 2021, 2022 வகுப்புகளும் நடைபெறுகின்றன
A/L 2020 Paper Class உம் ஆரம்பமாகின்றன

தொடர்புகளுக்கு :
077 395 6158 / 075 916 0431

உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

# CCTV Technician Course

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



(C-8944)

Approved Certificate
வேலைவாய்ப்பு உத்தரவாதம்
29th Batch : 25-Jan-2020 (*Conditions Apply)

Mobile Phone Repairing Course
15.02.2020 முதல் ஆரம்பம்

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள்கோவில் அருகாமையில்)
021-7306000, 077-6656778

# கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி கண்டாவளையைச் சேர்ந்த இளையதம்பி செல்லத்துரையின் மகள் தரணிக்குட்டியின் கண்ணீர் அஞ்சலி
(தரணி செல்லத்துரை - South Croydon - United Kingdom)



தோற்றம் 03.07.1990

மறைவு 06.01.2020

## தரணிக்குட்டி

*" நிழல் போல் இருந்தவள் நீ*
*நினைவாய் மாறினாய் .......!*
*கண் இமைக்கும் நேரத்தில்*
*கண்ணீர் துளியாகினாய் .......!*
*தரணியை ஆள வந்த நீ*
*தவிக்க விட்டு போனதேனோ???*

4ஆம் வாய்கால், கண்டாவளை.

தரணிக்குட்டியின் தவிப்புடன்
சித்தப்பா குடும்பத்தினர் - இளைய தம்பி செல்வராசா

(C-9004)

# கண்ணீர் அஞ்சலி



அகில இலங்கை கம்பன் கழகத்தின் அமைப்பாளர் மதிப்பார்ந்த கம்பவாரிதி **இ.ஜெயராஜ்** அவர்களின் அன்புத்தாயார் திருமதி

## குலமணி இலங்கராஜா

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் ஆத்மா கூத்தபிரானின் திருவடிகளில் பேரின்பம் பெற இறைதாள் பணிகின்றோம்.
ஓம் சாந்தி!

வலம்புரி நிர்வாகம்

# வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536 (C-8942)

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.